பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 19 | ஞாயிற்றுக்கிழமை 03.03.2019 | கதிர் 119

இனி து ரகசியம் அல்ல!

நேற்றிரவு 10.30 மணிக்கு கொழும்பில் இருந்து ஓர் அழைப்பு வந்தது.

"உங்களின் வடக்கு மாகாண ஆளுநரைப் பதவியிலிருந்து தூக்கி விட்டார்களாமே. உண்மையா?" - என்று கேட்டார் கொழும்பிலிருந்து ஒரு மூத்த பத்திரிகையாளர். பக்கம் 02 »



தூக்கு தண்டனைக்கு ஈ.பி.டி.பி. எதிர்ப்பு

உள்ளே பக். 03



தென்னாபிரிக்காவை வீழ்த்துமா இலங்கை?

உள்ளே பக். 14




சர்வதேச தரத்தில் யாழ்ப்பாணத்தில் இருதய சத்திர சிகிச்சை

உள்ளே பக். 10

# தள்ளாடுகிறது கூட்டமைப்பு!

## பாதையைச் சீர் செய்யாவிடின் இணைந்திருப்பதில் அர்த்தம் கிடையாது என்கிறார் ரெலோ சிறிகாந்தா



யாழ்ப்பாணம், மார்ச் 03

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தடுமாறிக்கொண்டிருக்கின்றது. தமிழினத்தின் விவகாரத்தைக் கையாளும் உரிமை-அதிகாரம்-தனக்கு மட்டுமே உள்ளது என்று தமிழரசுக் கட்சி தப்புக் கணக்குப்போடுகின்றது. கூட்டமைப்புக்குள் இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டு அது தனது இலட்சியப் பாதையில் தொடர்ச்சியாகப் பயணிக்கவேண்டும். இல்லையேல் அவர்களுடன் நாங்கள் ஒன்றாகப் பயணிப்பது என்பது இயலாத காரியமே."

- இவ்வாறு கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தொடர்பில் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு மனம் திறந்து கருத்து வெளியிட்டார் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களுள் ஒன்றான ரெலோவின் செயலாளர் நாயகம் என். சிறிகாந்தா.

(இது குறித்து அவர் காலைக்கதிருக்கு வழங்கிய செவ்வியின் முழு விவரம் 8ஆம், 9 ஆம் பக்கங்களில்)

## செலவாயன்று பட்ஜெட் ஏப்ரல் 5 வாக்கெடுப்பு

கொழும்பு, மார்ச் 03

2019 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்படும் பட் பக்கம் 15 »

## வலி. வடக்கில் 30 ஏக்கர் நாளை மாலை விடுவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 03

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ள 30 ஏக்கர் காணிகளும் மற்றும் மக்கள் பாவனைக்குரிய வீதி ஒன்றும் நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளன.

மயிலிட்டித்துறை பக்கம் 15 »

## நான்கு கட்சிகள் மட்டும் பங்கேற்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மீளவும் கால அவகாசம் வழங்கக்கூடாதென்ற நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் பக்கம் 15 »

## இலங்கை அரசுக்கு அவகாசம் வழங்குவதற்கு உடன்படோம்!

### மாவை நேற்றுத் திட்டவட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுவதில் எமக்கு பக்கம் 15 »

## எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கவே கூடாது

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்ப தமிழ்த் தேசியக் கட்சிகள் முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

'ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எக்காரணம் கொண்டும் மீண்டும் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது', 'ஐ.நா. பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபை ஊடாக பக்கம் 02 »

## கேப்பாபிலவு மக்கள் காணி கோரி நேற்றுக் கொழும்பில் போராட்டம்!



கொழும்பு, மார்ச் 03

கேப்பாப்புலவுகாணி மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களால் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. காணி உரிமைக்கான மக்கள் ஊர்வலம் பக்கம் 15 »

## கிளிநொச்சி மோதல்;

## பகிரங்க மன்னிப்பு கோரினார் சிறிதரன்!

கிளிநொச்சி, மார்ச் 03

கிளிநொச்சியில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பக்கம் 15 »

## சம்பந்தனை நான் சுடத் திரியவில்லை

### கூறுகிறார் சிறிதரன் எம்.பி.



கிளிநொச்சி, மார்ச் 03

இரா.சம்பந்தனை விடுதலைப் புலிகள் கொலை செய்ய திட்டமிட்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப் பக்கம் 15 »

## கேப்பாபிலவுப் போராட்டம் 3 ஆம் ஆண்டில் கால் பதிப்பு



முல்லைத்தீவு, மார்ச் 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி முல்லைத்தீவு பக்கம் 02 »

## ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டை தோற்கடிக்கமாட்டாது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 03

2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிக்கும் பக்கம் 15 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

## எக்காரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேசத் தீர்ப்பாயத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்', 'இலங்கை தொடர்பில் விசேட அறிக்கையிடும் அதிகாரியை ஐ.நா. நியமிக்கவேண்டும்' ஆகிய மூன்று பிரதான கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கையளிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி முடிவெடுத்துள்ளன.

ரெலோவின் தவிசாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

இந்த அறிக்கையின் பிரதிகள், பேரவையின் 47 உறுப்பு நாடுகள் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாதென்ற நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் ஒருமித்து எடுப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற தீர்மானம் இலங்கை அரசு உள்நாட்டு விசாரணையை நடத்தவேண்டும். அது கலப்புப் பொறிமுறை கொண்டதாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கியதாக பொதுநலவாய நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள் பங்குகொள்வார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதற்காக ஒன்றரை ஆண்டுகள் காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் அறிக்கையை ஒரு தாக்கல் செய்ய என்றும் அதன் பின்னர் 2017 இலும் இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் புதியதொரு அரசு வந்திருக்கிறதென்பதால் 4 ஆண்டுகள் முழுமையாக அவகாசம் வழங்கப்பட்டது. இப்போது 2019 மார்ச் மாதம் அந்த அவகாசம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அடுத்து என்ன என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

ஆகவே எங்களைப் பொறுத்தவரை போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் நாங்கள் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒரு பொது நிலைப்பாட்டை எட்டமுடியுமா என்பதில் ரெலோ ஈடுபட்டது.

இது சம்பந்தமாக எங்களைத் தவிர ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் நாங்கள் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தோம். அதிலே குறிப்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய ஆறு கட்சிகளுடன் நாங்கள் பேச்சு நடத்தியிருந்தோம்.

இதில் இன்று (நேற்று) கூட்டம் நடைபெற்றபோது 4 தமிழ் அரசியல் கட்சிகள் பங்குபற்றியிருந்தன. இதில் அனைவரதும் கருத்துக்கள் பெறப்பட்டு மாதிரி வரைவொன்றை நாங்கள் வைத்திருக்கின்றோம். அதை அவர்களிடம் நாங்கள் சமர்ப்பித்தும் இருக்கின்றோம். அதில் மூன்று பிரதான விடயங்களை முன்வைத்திருக்கின்றோம்.

எக்காரணம் கொண்டும் இலங்கை அரசுக்குக் கால நீடிப்பு வழங்கப்படக்கூடாது, இந்தப் பிரச்சினையை ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாகச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயதுக்குக் கொண்டு செல்லவேண்டும், இலங்கை தொடர்பில் விசேட அறிக்கையிடும் அதிகாரியை நியமிக்க வேண்டும் - என இந்த மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

சில நாட்களுக்குள் இதில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடமும் கையெழுத்து இடக்கூடிய கூடிய கட்சிகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கையெழுத்துக்கள் பெறப்பட்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கும், அதில் உள்ள 47 உறுப்பு நாடுகளுக்கும், ஐ.நா. செயலாளர் நாயகம் மற்றும் பொதுச் சபையில் இருக்கும் 193 நாடுகளுக்கும் அந்த அறிக்கையின் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

இதனை அனுப்பி வைத்த பின்னர் நாங்கள் ஊடகங்கள் வாயிலாக பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவோம். இந்த அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு நேரடியாக ஜெனிவாவில் வைத்துக் கையளிக்கப்படும் - என்றார். (ஐ-07)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகம் முன்பாக 2017ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் மூன்றாவது வருடத்தைத் தொட்டது.

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபிலவு மக்கள் இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்து மூன்றாவது வருடத்தில் காலடி வைத்துள்ளனர்.

இதனையொட்டி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் மக்களுடன் அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"நான் கேள்விப்படவில்லை. உங்களுக்கு யார் சொன்னார்கள்?"* - என்று பதில் கேள்வி போட்டேன்.

லண்டனில் இருக்கும் ஒரு சிங்கள அன்பர் - ஊடகளுடன் தொடர்புடையவர் - வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனைக் குறிப்பிட்டு 'Macho ar u Sacked? என்று தனது முகப்புத்தகத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். அதைப்பார்த்த கொழும்பு ஊடகவியலாளர் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து 'அலேர்ட்' செய்தார்.

நான் எனக்குரிய தொடர்புகள் மூலம் 'செக்' பண்ணினேன். நேற்றிரவு வரை அப்படி ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆளுநரின் ஊடகப் பிரிவுப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டோம்.

*''இந்த வதந்தி வெள்ளிக்கிழமையில் இருந்து ஓடுகின்றது. அப்படி ஒன்றும் இல்லை."* - என்றார் அவர்.

*"இந்த வதந்தியைப் பரப்பியவர்களைப் பிடித்து பொலிஸில் ஒப்படைக்க ஆளுநர் அகலக் கண் விரித்துப் பார்த்திருக்கின்றார். முகப் புத்தகங்கள் ஊடாக இத்தகைய புனைகதை பரப்பப்படுகின்றன. மூலப் பிரகிருதி யார் என்பதை கண்டறிய ஆளுநரும் பொறி வைத்துப் பார்த்திருக்கின்றார்."* - என்று ஆளுநருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சரி, இந்த வதந்'தீ' எங்கு சூடு பிடிக்கத் தொடங்கியது என்று தேடினேன்.

*"தமிழர்களின் நம்பிக்கை தகர்கின்றது; ஒவ்வொரு கிராமமும் சிங்களமே? இராகவன் பணிநீக்கம்?"* - என்ற தலைப்பில் தேர்தல் ஆணையாளர்களுள் ஒருவரான எஸ்.ரட்ணஜீவன் கூல் எழுதிய கட்டுரை ஒன்று நேற்று முன்தினம் பின்னிரவில் பிரபல ஆங்கில இணையத்தளம் ஒன்றில் பிரசுரமாகியிருந்தது.

*''வெள்ளி இரவு நான் இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துரையாடல்களுக்காகக் கொழும்புக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார் என்ற பீதியான செய்தி வதந்தியாக யாழ்ப்பாணத்தில் பரவிக் கொண்டிருந்தது. அவர் கொழும்புக்குப் பயணித்துக் கொண்டிருந்தார்..."* - என்று அந்தக் கட்டுரையில் ரட்ணஜீவன் கூல் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கட்டுரையில் சிலேடையாகக் குறிப்பிட்ட விடயம் முழுச் செய்தியாகி நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் பல பிரமுகர்களை கலங்கடித்து விட்டது.

-மின்னல்-


# NEW ASIAN CENTER

56/15B, Stanley Road, Jaffna. T.P. 0778249949 021 221 7474

வீட்டு மின் பாவனையாளர்களே எந்தவித மின்சார கட்டணமும் இன்றி இலவசமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்



200 யுனிற் மின்சாரத்திற்கு மேல் பயன்படுத்துவோர் நீங்கள் வழமையாக மின்சாரத்திற்கு செலுத்துகின்ற கட்டணத்தைத் தொடர்ந்து 60 மாதங்கள் மட்டுமே செலுத்த வேண்டும். இது 20 வருடங்களுக்கு எந்தவித மின் கட்டணமும் இன்றி இலவசமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக வங்கிகள் 6.75% வட்டிக்கு பணத்தை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 3,50000 ரூபாவுக்கு 260 யுனிற் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

| யுனிற் | 3500 வட்டி | நாம் செலுத்த வேண் டிய மின்சார கட்டணம் | மேலதிகமாக மின்சாரம் மின்சார நிலையத்திற்கு விற்பனை செய்தது. | மொத்தம் | வங்கிக்கு |
|---|---|---|---|---|---|
| 200 | 1866 | 3096 | 1320 | 4416 | 72 மாதம் |
| 220 | 1866 | 3970 | 880 | 4850 | 65 மாதம் |
| 240 | 1866 | 4920 | 440 | 5360 | 58 மாதம் |
| 260 | 1866 | 5922 | ---- | 5922 | 52 மாதம் |



### காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் 3 1/4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

நல்லூர் கோயில் வீதியில் 5 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

நல்லூர் மருதடி வீதியில் 1 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. ஒரு கோடி 35 லட்சம்
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் BMC வீதியில் 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 90 லட்சம்.
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் BMC வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
Jaffna Real Estate

பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு. (பரப்பு ஒன்றின் விலை 1.25 கோடி)
Jaffna Real Estate

யாழ். சென்ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு. (பரப்பு ஒன்றின் விலை 45 லட்சம்)
Jaffna Real Estate

சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வில் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

யாழ். புகையிரத நிலையத்துக்கு அண்மையாக அம்பலவாணர் வீதியில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 65 லட்சம்.
Jaffna Real Estate

### காணி விற்பனைக்கு



வசாவிளானில் தோட்டக்காணி 60 பரப்பு (பலாலி வீதிக்கு அண்மையாக) உடன் விற்பனைக்கு. பரப்பு 5 லட்சம்.
Jaffna Real Estate

தட்டாதெரு சந்திக்கு அண்மையாக 1 3/4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பரப்பு 40 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலி பிள்ளையார் வீதியில் 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பரப்பு 40 லட்சம்.
Jaffna Real Estate

நீர்வேலி கரந்தனில் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

கல்வியன்காடு ஜி.பி.எஸ். வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
Jaffna Real Estate

உரும்பிராய் பலாலி வீதிக்கு அண்மையாக 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

ஊரெழு திலீபன் வீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு. 48 லட்சம்.
Jaffna Real Estate

புன்னாலைக்கட்டுவன் சுன்னாகம் வீதியில் 26 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயக் கல்லூரிக்கு முன்பாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
Jaffna Real Estate

மானிப்பாயில் 3 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate



பொற்பதி வீதியில் 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 45 லட்சம்.
Jaffna Real Estate

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கோவில் வீதியில் வீடு விற்பனைக்கு. 4 கோடி 50 லட்சம்.
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் B.M.C. வீதியில் வீடு விற்பனைக்கு. 2 கோடி 25 லட்சம்.
Jaffna Real Estate

சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வில் வீடு உடன் விற்பனைக்கு. 75 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலியில் வீடு விற்பனைக்கு. மொத்த விலை 1 கோடி 35 லட்சம்.
Jaffna Real Estate

நீர்வேலி கரந்தன் பகுதியில் வீடு விற்பனைக்கு. மொத்த விலை ஒரு கோடி.
Jaffna Real Estate

### வீடு விற்பனைக்கு



கல்வியன்காடு G.P.S. வீதியில் வீடு உடன் விற்பனைக்குண்டு. 1 கோடி 15 லட்சம்.
Jaffna Real Estate

உரும்பிராய் (பலாலி வீதிக்கு அண்மையாக) வீடு விற்பனைக்குண்டு. மொத்த விலை 1 கோடி 20 லட்சம்.
Jaffna Real Estate

புன்னாலைக் கட்டுவன் (சுன்னாகம் வீதியில்) பழைய நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு. 90 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலி (விவசாயக் கல்லூரிக்கு முன்பாக) புதிய மாடி வீடு உடன் விற்பனைக்கு. 1 கோடி 75 லட்சம்.
Jaffna Real Estate

JAFFNA REAL ESTATE

வீடுகள், காணிகள், வர்த்தக நிலையங்கள், பண்ணைகள், விவசாய நிலங்கள் இன்னும் ஏராளமான விற்பனைக்குரிய ஆதனங்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு : 0761214255
Jaffna Real Estate
www.jaffnarealestate.com
34/2 Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.

### சேவை

Welding/ அனைத்து விதமான வெல்டிங் வேலைகள் குறுகிய காலத்தில் செய்திட
தொடர்புக்கு: 07694959 17

### சேவை

CCTV/ அனைத்து விதமான கண்காணிப்புக் கமராக்களைப் பெற்றிட VIP CCTV
தொடர்புக்கு: 0773767899

### அச்சுப் பதித்தல்

### அச்சுப் பதித்தல்

Navalar Printers

அனைத்துவிதமான 'பிறிண்டிங் மற்றும் பைண்டிங்' வேலைகளுக்கு
நாவலார் பிறிண்டேர்ஸ்
பருத்தித்துறை வீதி, 5 ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொலைபேசி: 021 223 1644 / 0777746855
மின்னஞ்சல்: navalar1023@gmail.com

### பயணம்

### பயணம்

CreativeTravels.ca

வெளிநாடுகளுக்கான பயணச் சீட்டுக்களைச் சிறந்த விலையில் துரிதமாகப் பெற்றுக்கொள்ள. தொடர்புகளுக்கு
தொலைபேசி: 0767088647
மின்னஞ்சல்: creativetravels.asia@gmail.com

150 ரூபாயிலிருந்து
உங்கள் விளம்பரங்களை இங்கே பிரசுரிக்க
அழையுங்கள்
021 222 3000
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# வடக்கில் தொடர்கின்றது சிங்கள ஊழியர் நியமனம்!

## கூட்டமைப்புக்கு பிரதமர் ரணில் வழங்கிய உறுதிமொழி வீண்

யாழ்ப்பாணம், மார்ச் 03

வடக்கில் சிங்களச் சிற்றூழியர்கள் நியமனம் தொடர்கிறது. நான்கு மாவட்ட செயலகங்களில் 7 சிங்களவர்கள் சாரதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 26 அரசியல் குழப்பத்தின் பின்னனர், அரசுக்கு ஆதரவளிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்தது. இதன்போது அலரிமாளிகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் – பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்புக்கள் நடைபெற்றன. இதன்போது, வடக்கில் சிங்கள ஊழியர்கள் நியமிக்கப்படக்கூடாது எனக் கூட்டமைப்பு கேட்டிருந்தது.

அதற்கு பிரதமர் சம்மதம் தெரிவித்திருந்தார். எனினும், அது தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது.

கடந்த 25ஆம் திகதியும் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் 7 சிங்களச் சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கனகரத்தினம் ம.வியில் ஆளுநர் இரு கட்டடங்களைத் திறந்தார்



அருகிலுள்ள பாடசாலை சிறந்தபாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதிபர் விடுதி மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகிய இரண்டையும் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலைகள் அணிவித்து பாண்ட் வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, மாகாணக் கொடி பாடசாலைக் கொடிகள் என்பன ஏற்றப்பட்டு இறைவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெற்றிருந்தது. இதனையடுத்து பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடங்கள் இரண்டையும் ஆளுநர் மற்றும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து திறந்து வைத்தனர். (ஐ)

## பண்டாரவன்னியன் ம.வியில் இரண்டு கட்டடங்கள் திறப்பு



முல்லைத்தீவு, மார்ச் 03

'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கனிஷ்ட விஞ்ஞான ஆய்வுகூடம், கற்றல் வள நிலையம் உள்ளடங்கலாக இரண்டு கட்டடத் தொகுதிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா திறந்து வைத்தார்.

நேற்று முன்தினம் மாலை கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் துணுக்காய் கல்வி வலய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## தூக்கு தண்டனை விடயத்தில் ஈ.பி.டி.பிக்கு உடன்பாடில்லை

### மைத்திரியின் முடிவுக்கு டக்ளஸ் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

சாவுத்தண்டணையின் ஊடாக எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை எமது கட்சி தீவிரமாக நம்புகின்றது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தூக்குத் தண்டனை விதிப்பதன் ஊடாக குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது. சாவுத் தண்டனையின் ஊடாக எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை நாம் தீவிரமாக நம்புகிறோம் – என்றார். (ஐ)

## காணாமற்போனவர்கள் விடயத்தில் ஆணைக்குழுக்களால் பயனில்லை

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 03

காணாமற்போனவர்கள் தொடர்பாக புதிய ஆணைக்குழுக்களை அமைப்பதால் எந்தப் பயனும் இல்லை என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சுஹுருபாயவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமற்போனவர்கள் தொடர்பாக புதிய ஆணைக்குழுக்களை அமைப்பதைவிடுத்து முதலில் காணாமற்போனவர்களுக்கான சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பரணகம மற்றும் உடலகம ஆணைக்குழுக்களின் தகவல்களைப் பெற்றுக் காணாமற்போனோருக்கான சான்றிதழ்களை வழங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

யுத்த பாதிப்புக்குள்ளான மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக அதற்கான செயற்திட்டமொன்றைத் தயாரித்து ஐ.நாவுக்கு அனுப்பிவைக்கவேண்டும் – என்றார்.

## பிரிகேடியர் பிரியங்கவின் செயலுக்கு இராஜதந்திர விலக்குக் கிடையாது!

### லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மன்று அறிவிப்பு

லண்டனில் போராட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுக்கும் சைகையைக் காண்பித்து அச்சுறுத்தல் விடுத்த செயலானது, இலங்கை இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமையுடன் தொடர்புடையதல்ல என்று வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் நீதிமன்ற தலைமை நீதிபதி எமா ஆபத்நொட், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு இராஜதந்திரத் தண்டனை விலக்குச் செல்லுபடியாகாது எனவும் நேற்று முன்தினம் அறிவித்தார்.

'கழுத்தை அறுக்கும்' சைகையைக் காண்பித்து புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தியனார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு இராஜதந்திரத் தண்டனை விலக்கு இருப்பதாக இலங்கை அரசு தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையிலேயே லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் இந்த முடிவை அறிவித்திருக்கிறார். (ஐ)

## சித்தார்த்தன் எம்.பி. மக்கள் சந்திப்புகளில்



யாழ்ப்பாணம், மார்ச் 03

சண்டிலிப்பாயில் மக்கள் சந்திப்பிலும், சமகால அரசியல் கலந்துரையாடலிலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டார்

மானிப்பாய்த் தொகுதிக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு மாகியப்பிட்டி பகுதியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மானிப்பாய்த் தொகுதிக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் பிரதேச மக்கள் மற்றும் இளைஞர்களுக்கும் இடையிலான சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. பிரதேசத்தின் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளதுடன் அரசியல் கலந்துரையாடல்களிலும் அவர் ஈடுபட்டார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை 05 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கு கொம்பனிப்புலம் ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்திலும், மாலை 6.30 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கு, உலக்காவளை ஸ்ரீ ஞானவைரவர் சனசமூக நிலைய மண்டபத்திலும் இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றன.

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி வட்டாரத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் சி.அனுசன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் கலந்துரையாடல் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் என்பன இடம்பெற்றுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந்த் மற்றும் வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் உறுப்பினர்களான சி.அனுஷன், ஜெசீதன், அ.ஜோன் ஜிப்றிக்கோ, ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலைய அங்கத்தவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள், ஊர்பொது மக்கள், பெண்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ – 7)

## மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 03

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

மன்னார் பிரதேசத்தில் –

நீராவிபுரம், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online


## அரசமைப்புத் திருத்த முயற்சி ஜெனீவாவை இலக்கு வைத்தா?

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் தடைப்பட்டு, தேங்கிப் போய்விட்டாலும், அதற்குப் பதிலாக அரசமைப்புத் திருத்தம் ஒன்றையாவது கொண்டு வரலாமா என்ற எண்ணப்பாடு அரசுத் தலைமையிடமும் சம்பந்தப்பட்ட ஏனைய வட்டாரங்களிலும் இருப்பதாகத் தெரிகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் போது மூன்று முக்கிய அடிப்படை விடயங்கள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், தேர்தல் முறைச் சீர்திருத்தம், அதிகாரப் பரவலாக்கல் ஆகியவையே அந்த மூன்றுமாகும்.

இதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல், தேர்தல் முறைமைச் சீர்திருத்தம் ஆகியவை தொடர்பில் தென்னிலங்கைக் கட்சிகள் இடையே பல்வேறு கருத்து முரண்பாடுகளும், முரணிலைப் போக்கும் உள்ளன என்பது துலாம்பரமானது.

எனினும் –

அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, தமிழர் தரப்புடன் இணைந்து, ஒரு முகப்பட்ட யோசனைத் திட்டம் ஒன்றையே அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவுக்குச் சமர்ப்பித்திருந்தன.

அரசமைப்பு வழிகாட்டல் குழு மூலம் நாடாளுமன்றத்துக்கு – அரசமைப்பு பேரவைக்கு – சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான நகலுக்குரிய முன்னாயத்த வடிவத்தில், அதிகாரப் பரவலாக்கல் குறித்த விடயத்தில் அதிக முரணிலைப்பாடுகள் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆகையினால், இணக்கம் காணப்பட்ட அந்த அதிகாரப் பரவலாக்கல் விடயத்தையாவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வந்து நிறைவேற்றலாமா என்ற யோசனை குறித்து இப்போது பரிசீலிக்கப்படுகின்றது.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் நடைபெறும் வேளையில் – அதுவும் அங்கு இலங்கை தொடர்பான விடயம் முக்கியமான பரிசீலனைக்கு எடுக்கப்படவிருக்கும் சமயத்தில் – இப்படி அதிகாரப் பரவலாக்கல் விடயத்தையாவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வந்து நிறைவேற்றலாமா என இலங்கை அரசுத் தரப்பு கருதுவதும், அது தொடர்பில் அவசர அவசரமாக முன் நடவடிக்கைகளை எடுப்பதும் கூட, ஜெனீவாவை ஒட்டி அரசு முன்னெடுக்கும் கபடத்தனமான நாடகமே என்று சில தரப்புகளினால் விமர்சிக்கப்படுகின்றது.

அப்படி இலங்கை அரசுத் தரப்பு ஜெனீவாவுக்குப் படம் காட்டுவதற்கு – இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனை திட்டத்தை அரசமைப்புத் திருத்தம் மூலம் நடைமுறைக்கு கொண்டு வருவதில் அரசு தீவிரமாக இருக்கின்றது என்று காட்டுவதற்கு – கொழும்பு முன்னெடுக்கும் நாடகம் இது என்றும் –

அந்த நாடகத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் – சம்பந்தனும் சுமந்திரனும் – முக்கிய பாத்திரமேற்று நடித்து, கொழும்புக்கு உதவத் தலைகீழாக நிற்கின்றனர் என்றும் –

கூட விமர்சனங்கள் சில தரப்புகளினால் முன்வைக்கப்படுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சிரேஷ்ட துணைச் செயலாளர்களுள் ஒருவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் அடியோடு மறுத்திருக்கின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் முட்டுக்கட்டை நிலையில் தேங்கியிருக்கின்றமையால் –

அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டு, அதிகாரப் பரலாக்கல் விடயங்களையாவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக முன்னெடுப்போம் என்ற கோரிக்கையை முன்வைத்தவர்கள் இலங்கை அரசுத் தரப்பினரோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியோ அல்லர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன்தான் அக்கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்து அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடும் அழுத்தம் கொடுத்தார் என்பதை சி.வி.கே.சிவஞானம் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

'செல்லும் செல்லாதவை எல்லாம் செட்டியார் கணக்கில்' – என்ற மாதிரி, அரசுத் தரப்பு தமிழர்கள் தொடர்பில் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் ஜெனீவாவை இலக்கு வைத்து நகர்த்தப்படும் நாடகங்கள் என்று எடுத்த எடுப்பில் விமர்சிக்க முற்படுவது தவறானது என்பதையும் சிவஞானம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் சாத்தியமானவை அல்ல என்பது இப்போது புலனாகி வருகின்றமையால் –

குறைந்த பட்சம் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தையாவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வர முயற்சிப்பதுதான் இன்றைய நிலையில் யதார்த்தபூர்வமான சாணக்கிய தந்திரமாகும்.

அதைச் செய்வதை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனீவாக் கூட்டத்துடன் சம்பந்தப்படுத்திக் குழப்புவது முட்டாள்தனமானதாகும்.

கோணேஸ்வரர் ஆலய தலைவாசலில் அமைக்கப்பட்ட

# சிவலிங்கத்தை உடைத்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

### செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

திருகோணமலை, மார்ச் 03

திருகோணமலையில்சிவலிங்கப்பெருமானை உடைத்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் –

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய தலைவாசலில் அமைக்கப்பட்ட சைவ மக்களின் பிரதான வழிபாட்டுச்சின்னமாகிய சிவலிங்கத்தை யார் உடைத்தார்களோ அவர்கள் மீது ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சைவ மக்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் செய்தியாக இச் சம்பவம் அமைந்துள்ளது. நாட்டில் அமைதியும் சமாதானமும் உருவாவதற்கு இடையூறாக இப் பாதகசெயல் இடம்பெற்றுள்ளது. சகல இன மக்களும் தரிசிக்கும் கோணேஸ்வரர் ஆலயத்தின் சிறப்புக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது காக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

இந்து கலாசார அமைச்சர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்தல்வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது இருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன். – என்றுள்ளது. (இ

## யோகா பயிற்சி நெறிகள் நல்லூரில் இன்று ஆரம்பம்

யாழ். யோகா உலகம் தேரடி அருகே 63நாயன்மார்குருபூசை மண்டபத்தில்புதியயோகாபயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப் பயிற்சி நெறிக்களுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகாஉலகம்அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் திருமதி விவியன்சத்தியசீலனின்யோகா பற்றிய விசேட கருத்துரையும் யாழ். பல்கலைக்கழக சித்தி மருத்துவமாணவர்கள்வழங்குகின்ற யோகஅசைவுகளும்இடம்பெறும். அனுபவப் பகிர்வை யோகசீலன வழங்குவார்.

யோகா வகுப்புக்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் 6.00 மணி தொடக்கம் 07.00 மணி வரை இரு பிரிவுகளாக ஒருமாதம்தினமும்நடைபெறும். இவை தவிர்ந்த நேரங்களிலான வகுப்புகளுக்கானபதிவுகளையும் மேற்காள்ள முடியும். (இ

### நல்லூரில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

இந்துசமய கலாசார அலுவல் கள்திணைக்களத்தின்ஏற்பாட்டில் தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள கலாநிதி தமிழருவி பேராசிரியர் வே.சங்கரநாராயணனின் சிறப்புச் சொற்பொழிவுநிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9. மணி தொடக்கம் 1 மணி வரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் என திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ

# ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஐ.தே.க. தயார்

### அமைச்சர் ஹரிசன் கூறுகிறார்



நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஐக்கியதேசியக்கட்சிதயாராகவே இருப்பதாக அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித் துள்ளார். கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அது இருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு எந்தக் கட்சி பிரேரணையைக் கொண்டு வந்தாலும் அதற்கு ஆதரவளிக்க நாம் தயார்.

இந்நிலையில் தற்போது மக்கள் விடுதலை முன்னணி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

20 ஆவது திருத்தம் மூலமாக நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு பல கட்சிகளுடன் மக்கள் விடுதலை முன்னணி கலந்துரையடவுள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. எனவே எதிர்காலத்தில் இவ்விடயம் குறித்து நாமும் அந்தக் கட்சியுடன் கலந்துரையாட இருக்

## கஞ்சிப்பான இம்ரானின் மற்றுமொரு சகா கைது!

டுபாயில் மாக்கந்துர மதூஷுடன் கைதுசெய்யப்பட்டுள்ள கஞ்சிப்பான இம்ரானுக்கு நெருக்கமான முக்கிய நபர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் திட்டமிட்ட குற்றத் தடுப்புப்பிரிவினருக்குக்கிடைத்த தகவலின்படி நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் ஐஸ் போதைப்பொருளும் வாள் ஒன்றும் இருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் நீண்ட காலமாக ஐஸ் வகைப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றமைதெரியவந்துள்ளது எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்கரக கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

### சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 03

கீரிமலை சிவபூமி மடத்தில் வழமைபோல்சிவராத்திரி நாளை முன்னிட்டு அன்னதானமும், சிறப்புக் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

திங்கள்மாலை 7.00மணிக்கு செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையில் சமயச்சொற்பொழிவும், குருசாமிசுகுமார் குழுவினரின் வீரபத்திரர் வசந்தன் கூத்தும், மாவிட்டபுரம் பொதுச் சேவைக் கழகம் வழங்கும்சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும், கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்களின் இசை நடன நிகழ்ச்சியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் காவடியாட்டம், ஒயிலாட்ட நிகழ்ச்சியும், தெல்லிப்பழை தமிழ்ச் சங்கம் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகமும் நடைபெறவுள்ளன. (ஐ)

### நாளை

04.03.2019
திங்கட்கிழமை

நட்சத்திரம்: திருவோணம் மு.ப 01.37 வரை
திதி : திரயோதசி பி.ப 05.57 வரை
சுபநேரம் : 12.26 – 01.56 வரை
இராகுகாலம் : 07.56 – 09.26 வரை

# ஈழத் தமிழர்கள் விடயத்தில் அமெ. தலையிடவேண்டும்




## வலியுறுத்தி ஆலயங்களில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 03

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா வர வேண்டுமென வலியுறுத்தி ஆலய வழிபாடுகளும் கையெழுத்து போராட்டமும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

காணாமலாக்கப்பட்டோரின் வவுனியா மாவட்டச் சங்கத்தினர் வடக்கு - கிழக்கு ரீதியாக மூன்று இலட்சம் கையெழுத்துக்களைப் பெறும் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில நாள்களில் மட்டும் முப்பதாயிரம் கையெழுத்துக்களைப் பெற்றுள்ள நிலையில் மேலும் கையெழுத்து பெறும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்து யாழ். கோட்டைக்கு அருகிலுள்ள முனியப்பர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து தந்தை செல்வா சமாதியிலும் வணக்கம் செலுத்தினர். (ஐ - 07)

# மனித உரிமைகள் ஆணைக்குழு இரணைதீவுக்கு திடீர்ப் பயணம்!

## மீள்குடியேறிய மக்களின் நிலையை நேரில் அறிய



கிளிநொச்சி, மார்ச் 03

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இரணைதீவுக்குத் திடீர்விஜயம்ஒன்றைமேற்கொண்டது.

இரணைதீவில் குடியேறியுள்ள மக்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக அறிந்து கொள்வதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கனகராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்மற்றும்கிளிநொச்சி பிராந்திய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் கனகராஜ் தலைமையிலான அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இரணைமாதா நகரில் இருந்து படகு மூலம் இரணைதீவுக்குச் சென்றிருந்தனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஊடாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு மற்றும் ஊடகங்களின் மூலம் அறிக்கையிடப்பட்ட செய்திகளின் அடிப்படையில் இரணைதீவு மக்கள் தொடர்பாக ஆராய்வதற்கு இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அங்கு மக்கள் நேரடியாக தங்களுடைய முறைப்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் முன்னிலையில் தெரிவித்தனர்.

குறிப்பாக இரணைதீவுப் பகுதியில் குடியேறி ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் இதுவரை தாம் உரிய முறையில் குடியேற்றப்படவில்லை எனவும், இவ்விடயத்தில் அதிகாரிகள் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, இந்தக் குழுவினர் மக்களின் வீடுகள், கோவில், பாடசாலைகள் போன்ற இடங்களைப் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தெனிபிட்டிய பகுதியிலிருந்து இரு சடலங்கள் கண்டெடுப்பு

கொழும்பு, மார்ச் 03

மாத்தறை - வெலிகம தெனிபிட்டிய பகுதியிலிருந்து இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள வேலைத்தளம் ஒன்றிலிருந்தே நேற்று இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த வேலைத்தளத்தில் பணிபுரிந்த இருவரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# இலங்கையில் 90 சதவீதமான பெண்களுக்கு ரயில்கள், பஸ்களில் பாலியல் துன்புறுத்தல்

இலங்கையில் 90 சதவீதமான பெண்கள் பஸ் மற்றும் ரயில் போன்ற பொதுப் போக்குவரத்து சேவைகளில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுகின்றனர் என ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இந்தப் பெண்கள் தமது வாழ்நாளில் ஒருமுறையேனும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் அந்த நிதியம் தெரிவித்துள்ளது. 4 சதவீதமான பெண்கள் மாத்திரமே இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்கிறார்கள் என வும் ஐக்கிய நாடுகளின் குடித்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பின்னணியில், எதிர்வரும் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண்களின் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, போக்குவரத்து அமைச்சு மற்றும் கொழும்பு மாநாகர சபை என்பன இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

"அவள் பாதுகாப்பாகப் பயணிக்கிறாளா?" என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணவர் நடவடிக்கையை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# போதைப்பொருள் குற்றங்களை விசாரிக்கத் தனியான நீதிமன்றம்

## — ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு —

போதைப்பொருள் குற்றங்களுடன்தொடர்புடையவழக்குகளை விசாரிக்கத் தனியான நீதிமன்றம் அமைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனதெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குற்றங்களை குறைத்தல்தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில்கலந்துகொண்டுகருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்ள நீண்ட காலம்



எடுக்கின் றது.

இதனால் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக நடைமுறைப் படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் தடைப்படும்வாய்ப்புக்கள்ஏற்படுகின்றன. மேலும், போதைப்பொருள்களுடன்சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது தொடர் பாக நாட்டின் அனைத்து மக்களும் ஒருமித்த கருத்துடன் இருக்கின்றார்கள்.

இவற்றைக்கருத்திற்கொண்டே போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கத் தனியான நீதிமன்றம் அமைப் பது தொடர்பாகக் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகள், அரச திணைக்களங்கள் மற்றும் சிறைச்சாலைகளில்போதைப்பொருள் பாவனையைஒழிப்பதுதொடர்பாகச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கைகள் எடுக் கப்படும் - என்றார். (ஐ)



# இந்தியா இலக்கு வைத்துத் தேடும் தீவிரவாதத் தலைவர் பாகிஸ்தானில்தான் இருக்கின்றார் என அந்நாடு ஒப்புதல்

இஸ்லாமாபாத்,மார்ச் 03

ஜெய்ஷ் - இ - முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அஸார் பாகிஸ்தானில் தான் இருக்கிறார், ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் மஹ்முத் குரேஷி ஒப்புக்கொண்டுள்ளார்.

நாற்பது இந்திய ஜவான்களின் உயிர்களைப் பலிகொண்ட புல்வாமா தாக்குதலுக்கு இந்த அமைப்பே காரணம் என்று கூறப்படுகிறது.

புலவாமாத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய மிராஜ் 2000 போர் விமாணங்கள் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி அழித்தன. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பாகிஸ்தான் விமானத்தை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதேசமயம், இந்திய விமானம் ஒன்று நொறுங்கி விழுந்துள்ளது. அதில் இருந்த விமானி அபிநந்தனை பாகிஸ்தான் இராணுவம் உயிருடன் கைது செய்தது.

இருநாடுகள் இடையே பதற்றச் சூழல் ஏற்பட்ட நிலையில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சமரச முயற்சியில் ஈடுபட்டன. இதையடுத்து அபிநந்தனை விடுதலை செய்வதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அறிவித்தார்.

இந்நிலையில் சி.என்.என். செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்துள்ள




பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மஹ்முத் குரேஷி கூறியவை வருமாறு:-

மசூத் அஸார் பாகிஸ்தானில்தான் இருக்கிறார். ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். வீட்டை விட்டு வெளியே வரமுடியாத அளவுக்கு அவரது உடல் நிலை மோசமாக உள்ளது. அதேசமயம் புல்வாமா தாக்குதல் தொடர்பாக இந்தியத்தரப்பில் உறுதியான ஆதாரங்களைத் தந்தால், அது பாகிஸ்தான் நீதிமன்றம் ஏற்கும் வகையில் இருந்தால், நாங்கள் மக்களைச் சமாதானம் செய்ய முடியும்.

அதேசமயம் மோதலை முடிவுக்கு கொண்டு வர பாகிஸ்தான் எப்போதுமே தயாராக உள்ளது. அவர்களிடம் உறுதியான ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் பேச்சுக்குத் தயவு செய்து வர வேண்டும். பேச்சுக்கு வந்தால் எங்கள் தரப்பை நாங்கள் தெளிவுபடுத்த முடியும். அடுத்தகட்டத்தை நோக்கி நகர முடியும்" எனக் கூறினார்.

## சோமாலியாவில் தலைநகர் மொகாடிசுவில் கார்க்குண்டுத் தாக்குதலில் 35 பேர் மரணம்

### முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயம்



சோமாலியாவின் தலைநகர் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 35 பேர் வரை உடல் சிதறிப் பலியானார்கள்.

தலைநகர் மொகாடிசுவில் மக்கா அல் முக்கராம்மா என்கிற வீதி உள்ளது. இங்கு நட்சத்திர ஹோட்டல்கள், வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் நிறைந்து காணப்படுகின்றமையால் இந்த இடம் எப்போதும் பரபரப்பாக இருக்கும்.

தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டி வந்து, இங்குள்ள ஒரு ஹோட்டலுக்கு வெளியே நிறுத்தி வெடிக்க செய்தனர்.

வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறியதில், அந்த பகுதியே அதிர்ந்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் சில கட்டடங்கள் தீக்கிரையாகின. இதனால் அங்கு பெரும் பதற்றமும் பீதியும் தொற்றிக்கொண்டது. மக்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினர். எனினும் குண்டுவெடிப்பில் சிக்கி 35 பேர் உடல் சிதறி பலியாகினர். 30இற்கும் மேற்பட் டோர் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு அல் - கொய்தாவின் ஆதரவு பெற்ற அல் ஷபாப் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது.

## பின்லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடனின் குடியுரிமையை மீளப் பெற்றது சவூதிஅரேபியா

டுபாய்,மார்ச்03



பின்லேடன் மகனான ஹம்ஸா பின்லேடனின் குடியுரிமை, சவூதி அரேபியா அரசால் திரும்பப் பெறப்பட்டது.

அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி பின்லேடன். அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவராகச் செயல்பட்டு வந்த நிலையில், அமெரிக்கச் சிறப்புப் படையால் பாகிஸ்தானில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது மகனே ஹம்சா பின்லேடன்.

பின்லேடன் மறைவுக்கு பின் அந்த இயக்கத்தின் தலைவராகும் முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளார் ஹம்சா பின்லேடன் எனக் கூறப்படுகிறது. சமீபகாலமாக அல் – கொய்தா பயங்கரவாதிகளிடம் பெரும் செல்வாக்கைப் பெற்ற ஹம்சா பின்லேடன் அமெரிக்கா மற்றும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகள் மீது தாக்குதல் நடத்தத் தீட்டம் தீட்டி வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகின. இதனால் அமெரிக்கா ஹம்சா பின்லேடனை தீவிரமாகத் தேடி வருகிறது.

மேலும் ஹம்சா பின்லேடன், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பகுதியில் பதுங்கியிருக்கலாம் என்றும் ஈரான் நாட்டில் தஞ்சமடையலாம் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹம்ஸா பின்லேடனின் குடியுரிமை சவூதி அரேபியா அரசு திரும்பப் பெறுவதாக நேற்று முன்தினம் அறிவித்தது. முன்னதாக ஹம்ஸா பின்லேடன் பற்றிய தகவல் அளிப்போருக்கு ரூ.7 கோடி(இந்தியப் பணப் பெறுமதிப்படி அளவிற்கு பரிசு வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் நீதிபதியை சுட்டுக் கொல்ல முயற்சி!

### படுகாயங்களுடன் தப்பினார்

இஸ்லாமாபாத்,மார்ச்03

பாகிஸ்தானின் நீதிபதி ஒருவரைச் சுட்டுக் கொல்ல எடுக்கப்பட்ட முயற்சியில் படுகாயங்களுடன் அந்த நீதிபதி தப்பினார்.

கைபர் பக்துங்கவா மாகாணத்தில் உள்ள பொவர் ஐகோர்ட்டில் நீதிபதியாக இருப்பவர் அயுப்கான். இவர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்து நீதிமன்றுக்குக் காரில் சென்று கொண்டிருந்தார்.

ஹயாதாபாத் என்ற இடத்துக்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம ஆசாமிகள் சிலர் நீதிபதியின் கார் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். இதில், நீதிபதி அயுப்கான் மற்றும் கார்ச் சாரதியின் உடலில் துப்பாக்கி குண்டுகள் துளைத்தன. அவர்கள் காருக்குள் ரத்த வெள்ளத்தில் சரிந்தனர்.

இதையடுத்து, அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவர்கள் இருவரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது இருவரும் நலமாக இருக்கின்றனர் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நீதிபதியைக் கொலைசெய்ய முயன்ற நபர்கள் யார்? அதற்கான காரணம் என்ன என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

(உ)


SUNJEYS A to Z SUPER MART

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்

100% இயந்திர மோட்டார்



பெற்றோல் தேவையில்லை. சூழல் மாசடையாது.
எண்ணெய் மாற்றத் தேவையில்லை.
புகைப் பரிசோதனை தேவையில்லை.

DESCRIOTION OF BIKE

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120 - 140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost for One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4 - 6 HRS |

நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு

உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாகச் சேமிக்க முடியும்

85,000 ரூபாய் மட்டுமே
(கையிருப்பு உள்ள வரை மட்டுமே!!)

# 0.30/= சதம் 1 Km இயங்கும் செலவு


SUNJEYS A to Z SUPER MART

இல. 98, அரசடி வீதி யாழ்ப்பாணம். (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

021 205 3077, 0777 474 111

# காஷ்மீரில் தீவிரவாதிகளுடனான சமரில் ஐந்து இந்திய படையினர் உயிரிழந்தனர்

## மேலும் எண்மர் படுகாயம்; 2 தீவிரவாதிகளும் சாவு



ஜம்மு– காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இந்தியப் பாதுகாப்புப் படை வீரர்கள் 5 பேர் உயிரிழந்தனர். இந்த மோதலில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தில் உள்ள கிரால்குந்த் கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதன்பேரில், வெள்ளி இரவு அப்பகுதியை சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர், துணை இராணுவப் படையினர், பொலிஸார்ஆகியோரைக்கொண்ட பாதுகாப்புப் படை அணி சுற்றி வளைத்தது.

பாதுகாப்புப் படையினர் தங்களை நெருங்குகின்றமையை அறிந்த தீவிரவாதிகள், அங்கிருந்த ஒரு கட்டடத்தில் இருந்து பாதுகாப்புப் படையினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து, அந்தக் கட்டடத்துக்குள் பாதுகாப்புப் படையினர் நுழைந்துள்ளனர். அப்போது, அங்கு இறந்து கிடந்தது போல் இருந்த தீவிரவாதி திடீரென எழுந்து துப்பாக்கியால் சுட்டுள்ளான்.

பின்னர், அங்கு மறைந்திருந்த தீவிரவாதிகள் அனைவரும் ஒருசேர பாதுகாப்புப் படையினரை நோக்கித் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதலில், பாதுகாப்புப் படை தரப்பில் 5 வீரர்கள் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், 8 வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், அங்கு தீவிரவாதிகளுடன் தொடர்ந்து துப்பாக்கிச்சண்டை நடைபெற்றுவருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


# இந்தியாவில்பொதுத்தேர்தல் தள்ளிப் போக வாய்ப்பில்லை!

## தலைமைத் தேர்தல் ஆணையர் திட்டவட்டம்

சென்னை, மார்ச் 03

இந்தியாவில் பொதுத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும். அதைத் தள்ளிப்போட வாய்ப்பேயில்லை என்று தலைமை. தேர்தல்ஆணையர்சுனில் அரோரா கூறினார்.

உத்தரப்பிரதேசத்தில் தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக சுனில் அரோரா வியாழனன்று லக்னோ வந்தார்.



வெள்ளியன்று அவர்செய்தியாளர்களைச்சந்தித்தார். இந்தியா - பாகிஸ்தான் இடையே தற்போது பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தேர்தல்அட்டவணை குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குஅவர், பொதுத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும். தள்ளிப் போட வாய்ப்பில்லை என்றார்.

இந்தியப் பொதுத்தேர்தல் இன்னும் இரண்டு மாதகாலத்தில்நடைபெறும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

அது குறித்து சுனில் அரோரா மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி, வேட்பாளர்கள்இனிஉள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் உள்ள தங்கள் சொத்து விவரங்களையும் வேட்பு மனுவுடன் தெரிவிக்க வேண்டும்.

இந்தத்தகவல்களை வருமான வரித்துறை ஆராயும். இதில் ஏதேனும்முரண்பாடு ஏற்பட்டால், அது தேர்தல் ஆணையஇணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டு, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வன்முறையை தூண்டும் வகையில் யார் பேசினாலும்அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தலை நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்திட தேர்தல்ஆணையம்உறுதி பூண்டுள்ளது. இதுதொடர்பாகஏதேனும்முறைப்பாடு வந்தால்உரியநடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் தொடர்பாக முறைப்பாடுகளைபொது மக்கள் அளிப்பதற்கு, 'சி-விஜில்' என்றசெயலி விரைவில் வெளியிடப்படும். இதில்புகார்அளிப்பவர்களின்பெயர்இரகசியமாக வைக்கப்படும். - இவ்வாறுசுனில்அரோரா கூறினார்.

# காஷ்மீரில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து ஐவர் மரணம்



ஸ்ரீநகர்,மார்ச்03


காஷ்மீரில் பள்ளத்தாக்கில் பஸ் ஒன்று கவிழ்ந்ததில் 5 பேர் பலியாகி உள்ளனர்.

ஜம்மு மற்றும் காஷ்மீரில் சூரின்சார் பகுதியில் இருந்து ஸ்ரீநகர் நோக்கி நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று உத்தம்பூரின் மஜல்டா பகுதியில் வந்தபொழுது பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது.

இதில் 5 பேர் அந்த இடத்திலேயே பலியாகி உள்ளனர்.

இதனை அடுத்துத் தகவல் அறிந்து உடனடியாக அங்கு சென்ற பொலிஸார் விபத்தில் சிக்கிய பஸ்ஸில் இருந்து பயணிகளை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

# பாகிஸ்தானில் அபிநந்தன் சிக்குவதற்குக் காரணமான மிக் - 21 ரக போர் விமானம் 'பறக்கும் சவப்பெட்டி'யாம்!



பாகிஸ்தானில்விங்கொமாண்டர் அபிநந்தன் சிக்கக் காரணமாக இருந்த மிக்–21போர் விமானம் 1966 இல் தயாரிக்கப்பட்டது. இந்த ரக விமானங்கள் விபத்துக்குள்ளாகி இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட உயிர்கள் பலியானமையால் அது 'பறக்கும் சவப்பெட்டி' என்றழைக்கப்படுகிறது.

கடந்த 1966 ஆம் ஆண்டில் ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட மிக்–21 ரக போர் விமானங்கள். அப்போது உலகின் தலை சிறந்தவையாகவும் பெருமை வாய்ந்தவையாகவும் அமைந்திருந்தன.

பிறகு காலப் போக்கில் நவீன ரகக் குண்டுகளும், அதற்கான எலக்ட்ரானிக் கருவிகளும் மிக்–21விமானத்திற்கு முழுமையாகப் பொருந்தவில்லை. இதன் பழமையான தொழில்நுட்பம் உள்ளிட்ட பல காரணங்களால பல சமயம் மிக்–21 விமானத்தில் கோளாறுகள் ஏற்பட்டன. நவீன ரக குண்டுகளை அதில் நிரப்பும் போது தொழில்நுட்பக் கோளாறுகளும் ஏற்பட்டன. இதனால், அவற்றின் விமானிகள் பலியாகின்றமையும், உயிர்பிழைக்கின்றமையும் அதில் ஏற்படும் கோளாறுகளின் வகையை பொறுத்தது என்றானது.

இது குறித்து இந்திய விமானப்படையின் ஓய்வுபெற்ற ஜூனியர் வாரண்ட் அதிகாரியான எஸ்.வரதராஜன் கூறும்போது-

"பறக்கும் நிலையில் மிக்–21 இயந்திரம் திடீர் என செயலிழந்தால் விமானியின் அதிவேக செயல்திறமையால்தன் இருக்கையின் ஒரு பொத்தானை அழுத்துவார். இதில், விமானத்தின் மேல்புறக் கதவு திறந்து அதில் தனது இருக்கையுடன் விமானி எகிறி வெளியேறி விடுவார். இந்த வகைப் போர்விமானம், பயிற்சியின் போது சிலசமயம் விபத்துக்குள்ளாகி விடுகிறது.

இதன் காரணமாக அதற்கு இராணுவத்தினர் 'பறக்கும் சவப்பெட்டி' எனவும், 'விதவைத் தயாரிப்பாளர்' என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். மிக்–21விமானம் விபத்துக்குள்ளானால் படைகளுக்குப் பல கோடி ரூபா நஷ்டம் எனப் பேச்சு எழுகிறதே தவிர அதில் பலியான விமானியின் உயிர் பற்றி கவலைப்படுவோர் மிகவும் குறைவு" எனத் தெரிவித்தார்.

மிக்–21 ரக போர் விமான விபத்தால் திறமை வாய்ந்த பல போர் விமானிகளும், பொது மக்களும் பரிதாபமாகப் பலியாகி உள்ளனர்.

இந்த மிக்–21 குறித்த ஒரு கேள்விக்கு 2012 இல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சரான ஏ.கே.அந்தோணி மாநிலங் களவையில் பதிலளித்தார். அதில் அவர், ஏப்ரல் 19, 2012 வரையில் மிக்–21 ரக போர்விமானத்தால் 171 விமானிகளும், 39 பொதுமக்களும் பலியாகினர் எனக் கூறினார். இந்த விபத்துக்களால் மிக்–21 விமானங்கள் எண்ணிக்கை 872 எனப் பாதியாகக் குறைந்து வீணாகி விட்டன எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து இராணுவபீரங்கி படையின் ஓய்வுபெற்ற பிரிகேடியர் வி.ஏ.எம்.உசைன் கூறும் போது -

"சிறிய நாடுகளின் பயன்பாட்டில் மட்டுமே உள்ள மிக்–21 விமான தயாரிப்பை ரஷ்யா 1985 இல் நிறுத்தி விட்டது. தற்போது பாகிஸ்தானுடன் நிலவும் பிரச்சினைகள் போன்ற சமயங்களில் உணரப்படும் முக்கியத்துவம், மற்ற நேரங்களில் இந்தியஈராணுவத்திற்கு கிடைப்பதில்லை. இது போன்ற குறைகளை மத்திய அரசு உடனடியாகத் தீர்ப்பது அவசியம். அப்போதுதான் நம்நாடு உண்மையானபாதுகாப்புபெறும்' எனத் தெரிவித்தார்.

மிக்–21 ரக விமானங்களின் கோளாறுகளை கார்கில் போருக்கு பின் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு கருத்தில் கொண்டது. இதன் பிறகு மிக்–21 விமானத்திற்கு ஈடாக வேறுவகை போர் விமானங்கள் வாங்க எடுக்கப் பட்ட முடிவு 19 ஆண்டுகளாக ஈடேறாமல் உள்ளது. இதில் ஒரு சிறந்த வகை விமானமாகக் கருதப்பட்டதுதான் ஊழல் புகாரில் சிக்கியுள்ள ரஃபேல் போர் விமானம் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir



# தனித் தமிழீழக் கோரிக்கையை மீளக் கையிலெடுக்க நேரிடும்

# தடுமாறி வருகி
# தமிழ்க் கூட்ட

## தமிழினத்தின் விவகாரத்தைக் கையாளும் உரி
## தனக்கே என தப்புக் கணக்கு போடுகிறது தமிழரசு

சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் இறங்கி வரவில்லை என்றால் -பௌத்த சிங்கள ஆதிக்கச் சிந்தனையில் இருந்து அவர்கள் விடுபடத் தயாரில்லை என்றால் - நாங்கள் மீண்டும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனித் தமிழீழக் கோரிக்கையை - சுதந்திரத் தமிழீழக் கோரிக்கையைக் கையிலெடுப்பது பற்றி தீவிரமாகச் சிந்திக்கவேண்டி வரும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் ரெலோ செயலாளர் நாயகம் மூத்த சட்டத்தரணி என். ஶ்ரீகாந்தா.

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி என்.சிறிகாந்தா காலைக்கதிர் நாளிதழுக்கு விசேட செவ்வி இது.

**கேள்வி** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என்ற ரீதியில் சமகால அரசியல் நிலைமைகளில் கூட்டமைப்பின் செயற்பாடுகளை எவ்வாறு கருதுகின்றீர்கள்?

**பதில்** - இன்றைய அரசியல் நிலைமையில் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் பல சவால்களை முன்னிறுத்தி உள்ளது. எமது மக்கள் நீண்ட காலமாகத் திட்டவட்டமாக வெளிப்படுத்தி வந்த அரசியல் நிலைப்பாடு இப்போது நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளது. இதற்குக் காரணம் சிங்களபௌத்தஅரசியல்ஆதிக்கசக்திகள்அல்ல. மாறாக எமது மக்களின் சார்பில் அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் பல்வேறு தரப்பினரும் என்று தான் கூற வேண்டும்.

இதில் பிரதானமாகக் கூட்டமைப்பின் பிரதான கட்சியாகத் தன்னை கருதிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியென்று பகிரங்கமாகக் கூறவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது. தலைவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லது தலைமைத்துவத்துக்கு உரிமை கோரிக் கொண்டிருப்பவர்கள் ஜனநாயக அரசியல் களத்திலே தமிழ் மக்களைக் கைவிட்ட துக்ககரமான நிகழ்வுகள் கடந்த காலங்களிலும் அரங்கேறியிருக்கின்றன.

ஆகவே இதையிட்டு நாம் மனந்தளரத் தேவையில்லை. எமது மக்கள் எப்பொழுதும் போல இப்போதும் மிக மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கையிலே தமது இலட்சியம் தொடர்பிலே உறுதியோடு இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையை நாங்கள் மாற்றியமைக்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி** - கூட்டமைப்பில் இருக்கின்ற பங்காளிகன் கட்சிகளில் ஒன்றான ரெலோ ஒரு நிலைப்பாட்டை எடுக்கின்றபோது கூட்டமைப்பாக வேறு ஒரு நிலைப்பாடு எடுக்கப்படுகிறது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்** - உண்மையைச் சொல்லப் போனால் 2001 ஆம் ஆண்டு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது இருந்த நிலைமை வேறு. இப்போது உள்ள நிலைமை வேறு. அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டமைப்பின் கவசமாக இருந்தார்கள். அத்தோடு உந்து சக்தியாகவும் இருந்தார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை.

கூட்டமைப்பு இப்போது தடுமாறிக் கொண்டிருக்கின்றது என்று கூற நான் தயங்கப் போவதில்லை. ஆனால் நாங்கள் அதாவது எமது ரெலோ இயக்கம் மக்களுக்குக் கடந்த தேர்தல்களில் எதை எதை முன்வைத்து வந்தததென்பதையும் அதனால் கூட்டமைப்பு ஆதரவைப் பெற்றுக் கொண்டதென்பதையும் ஒரு போதும் மறக்க மாட்டோம். ஆகவே கூட்டமைப்பின் கொள்கைத் திட்டத்தை முன்னெடுப்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

இந்த நிலைமையிலே இப்பொழுது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம், போர்க்குற்ற விசாரணை உட்பட தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பிலே எந்தவிதமான தள்ளாட்டமோ அல்லது சலனமோ எங்களுக்கு கிடையாது. விட்டுக்கொடுக்க முடியாத விடயங்கள் என்ன என்பது எங்களுக்கும் தெரியும். எமது மக்களுக்கும் தெரியும்.

**கேள்வி** - இந்த அரசுடன் இணைந்த கூட்டமைப்பின் பயணத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்** - சிங்கள பெரும்பான்மைக் கட்சிகள் தமக் குத் தேவைஏற்படும்போதுதமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்களைப் பயன்படுத்திக் கொள்வதும், தமது தேவை முடிந்த பிறகு அந்த மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை உதாசீனம் செய்வதும் கடந்த காலம் எங்களுக்கு கற்றுத் தந்த பாடம்.

இந்த பின்னணியிலே கூட்டமைப்பு தெளிவான பார்வையோடும் திடமான அரசியல் நிலைப்பாட்டோடும் தனது இலக்கை நோக்கி பயணிக்கவேண்டும் என்பது தான் எமது எதிர்பார்ப்பு. ஆனால் நிலைமை அப்படி அல்ல.

இப்பொழுது எமது மக்கள் பிரதிநிதிகளிலே மிகப் பெரும்பான்மையானோர் அபிவிருத்தி பற்றிப் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள். அபிவிருத்திக்காக அரசு அள்ளிக் கொடுக்கும் கோடிக் கணக்கான ரூபாக்களை எப்பிடி மக்கள் நலத் திட்டங்களுக்குப் பங்கீடு செய்வதென்பதில் தான் அவர்களுடைய கவனம் திரும்பியிருக்கிறது. எங்கள் அரசியல் இலக்கை நாங்கள் மறந்து கொண்டிருக்கிறோமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இது தான் கூட்டமைப்பில் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற அரசியல் முரண்பாடுகளுக்குக் காரணம். இந்த முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டு கூட்டமைப்பு தடம் மாறாமல் இலட்சிப் பாதையில் பயணிக்க வேண்டும். அது விரைவாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் நாங்கள் ஒன்றாகப் பயணிப்பதென்பது முடியாமல் போய்விடும்.

**கேள்வி** - கொள்கையில் உறுயாக ரெலோ செயற்பட்டு வருவதாகவும் கூட்டமைப்பு தடம்மாறுவதாக சொல்லியிருந்தீர்கள். அவ்வாறாயின் கொள்கைக்கு முரணாகத் தமிழரசுக் கட்சியா செயற்படுகிறது எனச் சொல்ல வருகின்றீர்களா?

**பதில்** - இவை தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து மேலும் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. ஆனால் இங்கு என்ன நடந்தது அல்லது தற்போது என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது அனைவருக்கும் தெரியும்.

**கேள்வி** - கூட்டமைப்பு அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் பயணத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்** - இன்று கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் திடிரென முளைக்கும் பௌத்த சிலைகளையும், புதிதாக உருவாக்கப்பட முயற்சிக்கின்ற பௌத்த விகாரைகளையும் தடுத்து நிறுத்தக் கூட்டமைப்பினால் முடியவில்லை.

முல்லைத்தீவின்எல்லையோரமாகஊடுருவிதிருகோணமலை மாவட்டத்துக்கும் முல்லைத்தீவு மாவட்டத் துக்கும் இடையில் இருக்கின்ற நிலப்பரப்பைத் தொடர்ச்சியை உடைத்து தமிழர் தாயகத்தை நிலப்பரப்பு ரீதியாக பிளப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைக்கிள்ளியெறிய கூட்டமைப்பினால் முடியவில்லை. அரசியல் கைதிகள் விடயத்திலே ஒரு சிலவற்றையேனும் கூட கூட்டமைப்பினால் சாதிக்க முடியவில்லை. இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பிலே சிறிதளவேனும் முன்னேற்றத்தை சமீப காலத்திலே காண முடியவில்லை.

வடக்கு - கிழக்கில் எந்தத் திசையிலே பார்த்தாலும் பயமுறுத்துவது போல பெரும் கோட்டை முகப்புக்களோடு இராணுவ முகாம்கள் தொடர்ந்து காட்சியளிக்கின்றன. இவற்றில் சிலவற்றையேனும் கூட கூட்டமைப்பாலே அகற்றுவது தொடர்பில் எதையும் செய்ய முடியவில்லை. அப்படியானால் நாங்கள் ஏன் அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அபிவிருத்தி என்ற பெயரில் அங்கும் இங்குமாகப் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அள்ளித் தெளித்து அல்லது கிள்ளித் தெளித்து அடுத்த தேர்தலில் அவர்களுடைய வாக்குகளை மீண்டும் எங்களுக்கு உறுதிப்படுத்துவது தானா எங்களது நோக்கம் என்ற கேள்வியைக் கூட்டமைப்பிலுள்ள அரசியல் மனச்சாட்சி கொண்ட ஒவ்வொரு பிரமுகரும் கட்டாயம் எழுப்பி அதற்கு விடை காண வேண்டும்.

கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருண்டு விட்டது என்று எவராவது நினைத்தால் அந்த நினைப்பு மக்களாலே தவிடுபொடியாக்கப்படும் என்பதையும் நாங்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதாவது கூட்டமைப்பு தன்னை ஆத்ம பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதிலுள்ள ஒவ்வொரு கட்சியும் - ஒவ்வொரு தலைவரும் - ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இதைக் கட்டாயம் செய்தாகவேண்டும்.

நாங்கள் எதற்காக அரசியலில் இருந்து கொண்டிருக்கிறோம். சமூகத்திலே எங்களுக்கென்று அடையாளத்தைப் பெறமுடியுமென்ற நிலையிலே நாங்கள் இருக்கிறோமா அல்லது எங்கள் மனக் கர்வத்துக்கு இரைபோடுவதற்கான ஓர் ஏற்பாடாக அரசியலைக் கருதுகிறோமா அல்லது பணம் சம்பாதிப்பதற்கும் சொகுசான வாழ்விற்குமான அடிப்படையாக இன்றைய அரசியல் சூழ்நிலையை நாங்கள் கருதுகிறோமா? இந்தக் கேள்விகள் மக்கள் மத்தியிலே எழுந்திருக்கின்றன.

சாதாரண மக்கள் அரசியல் பேசும்பொழுது இப்போழுது எல் லாம் சலிப்போடு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும். எங்களில் எத்தனை பேர் சாதாரண அடித்தட்டு மக்களோடு அரசியல் பேசும் நிலைமையில் இருக்கிறோம். அந்த உணர்வு எங்களுக்கு இருக்கிறதா? அந்த அவசியம் எங்களில் எத்தனை பேருக்குத் தெரிகிறது. இதையெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்திலே சிந்திக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

நாங்கள் அரசியலில் தொடர்ந்து இருப்பதானால் அந்த அரசியல் எமது மக்களுக்காக மட்டுமே இருக்க வேண்டும். இதைத் தான் இந்த நேரத்தில் சொல்ல முடியும். சிங்கள அரசியல் தலைவர்களுக்கு நல்ல பிள்ளைகளாகச் சேவையாற்ற விரும்பினால் அத்தகைய மனிதர்கள் இருக்கவேண்டிய கட்சிகள் சிங்களக் கட்சிகள்.

அந்த வாய்ப்புகள் தாராளமாக உள்ளன. கூட்டமைப்பு என்பது ஐக்கிய தேசியக் கட்சியை அரவணைத்தபடி ஐக்கிய தேசிய தமிழ்க் கூட்டமைப்பாக மாறிக் கொண்டிருக்கிறதா என்ற கேள்வி இப்பொழுது மக்கள் மத்தியில் இருக்கிறது. இதற்குக் கூட்டமைப்பு பதில் கண்டாக வேண்டும்.

**கேள்வி** - அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு போன்றன முழுமையாக நடக்கவில்லை. அதே நேரம் வடக்கு - கிழக்கு நிலப்பரப்பைச் சூறையாடி பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன என நீங்கள் கூறுகின்றீர்கள். அதே நேரத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசில் தாம் பலதைச் சாதித்தனர் எனக் கூறுகின்றனரே?

**பதில்** - காணி விடுவிப்பை பொறுத்த மட்டிலே நடந்தவை போக மிகுதியைப் பொறுத்த வரை கடந்த ஒக்ரோபர் மாத அரசியல் அதிகாரபோட்டிக்கு பிறகு அதாவது ரணில் விக்கிரமசிங்க அரசு மீண்டும் பதவிக்கு வந்த பிறகு என்ன நடந்திருக்கிறது என்று நாங்கள் பார்க்க வேண்டும். ஒரு உதாரணத்திற்கு வேண்டுமானால் கேப்பாபிலவைக் குறிப்பிட முடியும். இரண்டு வருடங்களுக்கு மேலாக அந்த மக்கள் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விடயத்திலே பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையிலே ஜனாதிபதியும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் நாங்கள் கூட்டமைப்பு கேப்பாபிலவு உட்பட எமது மக்களுக்குரிய காணிகளை மீளப் பெறுவதில் வெறுமனே அவ்வப்போது அரசுடன் மென்மையாகப் பேசுவதைத் தவிர வேறு எதை செய்திருக்கிறோம் அல்லது செய்ய முயற்சித்திருக்கிறோம்.

அழுகிற பிள்ளை தான் பால் குடிக்க முடியும். கூட்டமைப்பு நினைத்தால் வடக்கு - கிழக்கை ஸ்தம்பிக்கச் செய்ய முடியும். இதய சுத்தியோடும் துணிச்சலோடும் கூட்டமைப்பு நாளை முதல் செயற்படுமாக இருந்தால் இந்த அரசை இயங்காமல் செய்ய முடியும். அரசின் தலைமை சிங்கள அரசியல் தலைமை - தமிழ் மக்களை கிள்ளுக் கீரைகளாக நினைத்துக் கொண்டு செயற்படுகிறது.

எமது மக்களின் பிரதிநிதிகளின் பெறுமதி என்ன என்பது தொடர்பிலே அந்தத் தலைமைக்கு வேறு அபிப்பிராயம் இருப்பதாகவே தான் எனக்குத் தோன்றுகிறது. இது ஒரு பாரதூரமான பிரச்சினை. தென்னிலங்கையைப் பொறுத்த மட்டிலே ஆகக் குறைந்தது ஜே.வி.பி. செயற்படுவது போன்றாவது கூட்டமைப்பு செயற்பட முயற்சித்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**கேள்வி** - அரசு எதனையும் செய்யவில்லை என்றும் கூட்டமைப்பும் உரிய முறையில் செயற்படவில்லை என்றும் நீங்கள் கூறுகின்ற அதே நேரத்தில் உங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட கூட்டமைப்பு தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவை வழங்கி வருகிறதே?

**பதில்** - இந்த முரண்பாடு தான் கூட்டமைப்பின் எதிர்காலத்தை தற்போது கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. கூட்டமைப்பு வேண்டுமானால் உடைந்து போகலாம் அல்லது இல்லாமல் போகலாம். தமிழ் மக் கள் இன்னுமொரு அரசியல் தலைமையை தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் கூட்டமைப்புக்கு என்று சில பொறுப்புக்கள் அடுத்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வரை இருந்து கொண்டிருக்கின்றன.

மக்களுக்கு நாங்கள் கணக்கு காட்டியாக வேண்டும். எவருடைய நிகழ்ச்சி நிரல்களுக்கும் ஏற்ப நாங்கள் செயற்பட முடியாது. எந்த நாடும் தன்னுடைய சொந்த நலன்களின் அடிப்படையில் தான் தங்களுடைய வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கின்றன. எங்களைப் பொறுத்தமட்டிலே எங்கள் நிகழ்ச்சி நிரல் எங்கள் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தான் முழுக்க முழுக்க அமைய வேண்டும்.

அதைவிடுத்து அவரையும் இவரையும் திருப்திபடுத்துவதற்கோ அல்லது அந்த நாட்டையோ அல்லது இந்த நாட்டையோ திருப்திப்படுத்துவதற்கோ நாங்கள் வளைந்து கொடுக்கிறோம் என்றால் நாங்கள் மக்களுக்கு தலைமைத்துவத்தைக் கொடுப்பதற்கு தகுதியற்றவர்கள்.

உரிமைப் போராட்டம் என்ற பெயரிலும் விடுதலைப் போராட்டம் என்ற பெயரிலும் எமது மக்கள் குறிப்பாகச் சாதாரண பொது மக்கள் - அரசியல் நுட்பங்களைப் பற்றி தெரிந்து கொண்டிராத பொது மக்கள் என்ன விலை கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஒவ் வொரு நாளும் நினைத்துப் பார்க்க நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எமது மண்ணிலே ஒவ்வொரு நாளும் பல பத்து வீடுகளிலே அழுகுரல் கேட்கின்ற அளவிற்கு எமது



மக்களுடைய குடும்பங்கள் இழப்புக்கனை
தித்திருக் கின்றன. அரசியல் வாதிகளில் வேண்டும
பல.அரசியல்வாதிகள் இதற்கு விதிவிலக்காக இருக்
ஆனால் மக்கள் அப்படியல்ல. இது ஒரு மனச்சாட்
சம்பந்தப்பட்ட பிரச்சினை.

ஆகவே எமது கட்சியைப் பொறுத்தமட்டிலே
நடிக்கவில்லை. நடிக்க முடியாது. எமது கட்சிச்
வரலாறு இருக்கிறது. அந்த வரலாற்றிலே சில சந்த

# கின்றது மைப்பு

சந்திப்பு - நிதர்ஷன்

## உரிமை ழரசு



**காலைக்கதிருக்கு ஸ்ரீகாந்தா விசேட செவ்வி**

ளிலே நாங்கள் முதுகில் குத்தப்பட்டிருக்கிறோம். நெஞ்சில் குத்தப்பட்டிருக்கிறோம். தள்ளி வீழ்த்தப்பட்டிருக்கிறோம். நிர்ப்பந்தங்கள் எங்களை வழுக்கி விழச் செய்திருக்கின்றன. சூழ்நிலைகள் நாங்கள் விரும்பாத சில முடிவுகளிற்கு எங்களைத் தள்ளியிருக்கின்றன.

ஆனால் இவற்றின் மத்தியில் எங்களுடைய இதயங்களிலே எங்கள் தாயகத்தின் விடுதலை தமிழீழத்தின் விடுதலை, என்பன தொடர்ந்து நெருப்பாக எரிந்து கொண்டிருக்கின்றன என்பதை மாத்திரம் என்னாலே உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆகவே நாங்கள் எமது மக்களுடைய நலன்களைப் பலியிட்டு சந்தர்ப்பவாத அரசியலுக்காக - சமரசத்துக்குப் போக முடியாது. இதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆனால் இந்த உறுதிப்பாடு அல்லது இந்த நிலைப்பாடு எங்களை எங்கே கொண்டு போய் விடப் போகின்றது என என்னால் ஆருடம் கூற முடியாது.

**கேள்வி** - கூட்டமைப்புக்கும் ரெலோவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடு தேர்தல் கால முரண்பாடாகச் சொல்லப்படுகிறதே?

**பதில்** - இது தொடர்பில் கடுமையான வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமாக இருந்தால் இது கீழ்த்தரமான பார்வை. நாகரிகமாகச் சொல்ல வேண்டுமாக இருந்தால் மலினப்படுத்துகின்ற கண்ணோட்டம். இதில் என்னிலே குற்றம் காணாமல் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினை தற்போது ஆசனங்களுக்காக அல்ல என்பதை கூறிக் கொள்கிறேன்.

ஆனால் ஆசனங்கள் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டன உண்மை. எங்களைக் கிள்ளுக் கீரைகளாக நினைத்து தமிழரசுக் கட்சியிலுள்ள சில தலைவர்கள் செயற்பட முயன்றார்கள். அதனால் தான் பிரச்சினை ஏற்பட்டது. இருந்தாலும் சம்பந்தன் விடுத்த வேண்டுகோளை ஏற்று நாங்கள் மீண்டும் பேச்சுக்குப் போனோம்.

அதில் திருப்திகரமான சமரசம் ஏற்பட்டது. அதை மாத்திரம் வைத்துக் கொண்டு தயவுசெய்து எங்களுடைய நடவடிக்கைகளை நிறக்கண் காண அல்லது கலர்க்கண்ணாடிகளூடாக எவரும் பார்க்கக் கூடாது. நாங்களும் விரும்பினால் தாராளமாக ஒத்துப் போகலாம். ஆனால் அது எங்களாலே முடியாமல் இருக்கிறது.

கூட்டமைப்பினுடைய அடிப்படை பிரச்சினை என்னவெனில், தமிழரசுக் கட்சியினுடைய தலைமை என்பது தான் நினைத்தது போல தமிழினத்தின் விவகாரங்களைக் கையாளுகிற உரிமை அதிகாரம் தனக்கு இருப்பதாக தப்பு கணக்கு போட்டதால் ஏற்பட்டிருக்கிற விளைவு தான். இதனை நான் அழுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆனாலும் இதற்காக அவர் காரணம் இவர் காரணம் என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். ஒட்டு மொத்தமாக தமிழரசுக் கட்சியினுடைய தலைமையை இந்த விடயத்திலே விமர்சிக்க முடியும். அவர்கள் தான் பொறுப்பு என்று என்னாலே கூற முடியும். எமது மக்களுடைய அடிப்படைப் பிரச் சினைகள் தொடர்பிலே பல முடிவுகளை தமிழரசுக் கட்சியினுடைய தலைமை தானே எடுத்திருக்கிறது.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு மீண்டும் மீண்டும் முயற்சிக்கவேண்டியிருந்தது. ஒரு கூட்டு அணி யைப் பொறுத்தவரை இது ஆரோக்கியமானது அல்ல. அது மாத்திரமல்ல தமிழ் மக்களின் அரசி யல் மரியாதையை மலினப்படுத்தக் கூடிய விதத் திலே சமீபத்தில் ஒரு நிகழ்வு நடந்தது. நான் அதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. அது என்ன வென்று உங்களுக்கும் தெரியும்.

எங்களது எம்.பிக்களை தமிழ் மக்கள் நாடளு மன்றம் அனுப்பியது அந்தப் பதவிக்கும் இந்தப் பதவிக்கும் உரிமை கோருவதற்காக அல்ல. எமது மக்களுக்காக போராடுவதற்காக, குரல் எழுப்புவதற்காக தான். ஆனால் சமீபத்திய கடந்த காலம் எங்களுக்கு வேறொரு கதையைச் சொல்லியது. இத்தகைய ஒரு சூழ்நிலைக்குள்ளே ஒருபொழுதும் தந்தை செல்வநாயகம் தன்னை உட்படுத்தியது கிடையாது. அண்ணண் அமிர்தலிங்கம் கூட எந்தப் பதவியையும் தேடிப் போகவில்லை. தனக்கு உரியதைத் தான் அவர் பெற்றுக் கொண்டார்.

ஆனால் நாங்கள் சமீபத்திலே பார்த்தது எமது மக்கள் அனைவரும் கூனிக்குறுகிநிற்கவேண்டிய சூழ்நிலையைத் தான். இதெல்லாமல் எதற்காக? இவையெல்லாம் நிரந்தரமானவையா? இதனால் எமது மக்களுக்கு கடந்த காலத்திலே எதனைப் பெற்றுத்தர முடிந்தது. இதையெல்லாம் மறந்து விட்டு அற்ப சொற்ப ஆசைகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தான் கூட்டமைப்பு என்றால், அவ்வாறான கூட்டமைப்பு யாருக்குத் தேவை என நான் கேட்க விரும்புகின்றேன்.

எந்தவொரு தனிமனிதனுக்கும் கட்டுபாடற்ற அதிகாரங் களையும் தங்களுடைய தெரிவுகளையும் தங்களுடைய வாக்குப் பலத்தாலே மக்கள் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுக்கவும் மாட்டார்கள் என்பதை தயவு செய்து அனை வரும் புரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி** - கூட்டமைப்பின் மீது கடுமையான விமர்சனங்கள் குற்றச்சாட்டக்களை முன்வைக்கின்றீர்கள். அதே நேரம் உங்கள் கட்சி பல முடிவுகளை எடுத்திருந்தாலும் இறுதியில் தமிழரசுக்கட்சியின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டதாகவே சொல்லப்படுகிறதே?.

**பதில்** - இது கண்மூடித்தனமான குற்றச்சாட்டு அல்லது ஆராயப்படாமல் மேற்கொள்ளப்படுகிற விமர்சனம் அல்லது ஒரு சிலரால் வேண்டுமென்றே முன்வைக்கப்படுகிற ஒரு கருத்து. ஒற்றுமையின் பெயரால் எமது கட்சியினுடைய நலன்களைப் புறந்தள்ளி நாங்கள் ஒற்றுமையைக் காப்பாற்றியிருக்கின்றோம். ஆனால் அடிப்படைப் பிரச்சி னைகளிலே நாங்கள் எங்கே விட்டுக் கொடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும்.

உதாரணமாக இந்த அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அரசியல் தீர்வுத் திட்டம், இடைக்கால அறிக்கை தொடர்பிலே கூட்டமைப்பிற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டன. அந்தப் பிரசார நடவடிக்கைகளின்போது பல மேடைகளில் ரெலோவின் சார்பிலே உரையாற்றிய நானும் நண்பர் சிவாஜிலிங்கமும் சில கருத்துக்களை உறுதியாகத் தெரிவித்தோம்.

அதாவது ஒற்றையாட்சியை ஏற்க முடியாது. பௌத்தத்தை அரச மதமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பௌத்தத்திற்கு வேண்டுமாணால் முதலிடத்தைக் கொடுக்கலாம். ஆனால் ஏனைய மதங்களுக்கு சம இடம் வேண் டும். உதாரணமாகப் பௌத்தத்திற்கு வேண்டுமானால் முதற்கதி

## தடம் மாறாமல் இலட்சியப் பாதையில் பயணிக்கவேண்டும் இல்லையேல் ஒன்றாகப் பயணிப்பது இயலாத காரியமே

ரையைக் கொடுங்கள். ஆனால் அதே மாதிரியாக - அதே அளவுள்ள - அதே தரமுள்ள கதிரைகள் அதே வரிசையில் பௌத்தத்தை அடுத்து அனைத்து மதங்களுக்கும் வேண்டும். இதை நாங்கள் திட்டவட்டமாகச் சொல்லுகிறோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது எங்களது அடிப் படைக் கோரிக்கை. தமிழீழம் பிரிக்கப்பட முடியாதது. அதை பிரிப்பது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியா தது என்பதையும் நாங்கள் வலியுறுத்தினோம். அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் இடைக்கால அறிக்கை தொடர்பிலான நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிட்டபோது நாங்கள் எமது நிலைப்பாட்டைக்கூறவேண்டிஏற்பட்டதற்கமைய அதை நாங்கள் திட்டவட்டமாக நிராகரித்து அதற்கான காரணங்களையும் சொல்லியிருக்கிறோம்.

இந்த விடயத்தில் ரெலோ இதய சுத்தியுடன் நடந்திருக்கிறது. இப்போது கூட ஜெனிவா சம்பந்தப்பட்ட பிரச் சினை வந்திருக்கிறது. போர்க்குற்ற விசாரணையில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை. இதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஆகவே இந்தக் குற்றச்சாட்டைச் சில தரப்பினர்கள் மேற்கொள்ளும்பொழுது அது ஏன் தொடுக் கப்படுகிறதென்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக அரசியல் நோக்கத்தோடு சொல்கிறார்கள். ரெலோ மக்களுக்கு முன்னாலே வைத்த நிலைப்பாட்டை உயர்த்திப்பிடிக்க விரும்பாதவர்கள் அதைக் கூறுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மாற்றுத் தலைமையாக தங்களை நிலை நிறுத்த வேண்டுமென்ற அரசியல் கனவைக் கெனாண்ட ஒரு சிலரும் கூட இப்படியான் நிலைப்பாட்டுக்கு அல்லது இப்படியான கண்ணோட்டத் திற்கு தங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இது அரசியலிலே சகஜமானது. ஆனால் இதில் ஒன்றை நான் உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன். அதாவது தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த இடைக்கால அறிக்கை, அது தொடர்பான நிபுணர்குழுவின் அறிக்கை என்பவற்றிலே எமது கட்சி ஒருபோதும் இணங்கி விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

ஜெனீவாத் தீர்மானம் தொடர்பிலும் எங்களுடைய கட்சி தற்போது எடுத்த நிலைப்பாட்டில் விட்டுக் கொடுப்பிற்கோ சமரசத்திற்கோ இடமில்லை. இதில் நாங்கள் எவ்வளவு தூரம் உறுதியாக இருக்கிறோம் என்பதை விரைவிலே காலம் அனைவருக்கும் காட்டும் என்பதை மாத்திரம் தான் என்னாலே இப்போது சொல்ல முடியும்.

**கேள்வி** - ஆனாலும் ரெலோ தன்னுடைய முடிவை எடுத்து அறிவித்தாலும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் கூட்டமைப்பினதும் செயற்பாடுகள் ஒரேமாதிரியாகத் தானே உள்ளதே?

பதில் - குறிப்பாக அரசுக்கு ஆதரவளிக்கக்கூடாதென ரெலோ ஒருபோதும் கூறவில்லை. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலே எங்களது கருத்துக்கள் ஏற்கப்பட்டிருந்தன. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டபோது நாங்கள் எடுக்கக் கூடிய நிலைப்பாடு அரசியல் சாசனங்களோடு மாத்தி ரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அதனை தமிழரசுக் கட்சியும் புளொட்டும் ஏற்றுக் கொண்டிருந்தன.

ஆனால் மஹிந்த அமைத்த அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரனை இரண்டு தடவைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு அதனைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும்பான்மை இருக்கிறதென்று நிரூபிக்கப்பட்ட பிறகு எங்களுக்கு முன்னாலே இருந்த தெரிவு என்ன? மஹிந்த போக வேண்டுமாக இருந் தால் இன்னொருவர் அந்தப் பதவியிலே அமர்ந்து தான் ஆகவேண்டும். ஆகவே அங்கு தெரிவு மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு மீண்டும் வருவதாக இருந்தால் அவருக்குப் பெரும்பான்மை கட்டாயமாகத் தேவை. அதைக் கொடுப்பதிலே கூட்டமைப்பிற்கு முன்னாலே இருந்த கேள்வி என்னவெனில் எந்த அடிப்படையிலே அதை வழங்க வேண்டும் என்பது தான். அவை தொடர்பில் கருத்துப் பரிமாற்றங்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவிலே மேற்கொள்ளப்பட்டன.

அதில் சில கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்று நாங்கள் வலிறுத்தினோம். அதை தமிழரசுக் கட்சியும் புளொட்டும் ஏற்றுக் கொண்டீன. அந்தக் கோரிக்கைகனள் அரசுக்கு முன்னாலே குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு முன்னாலே வைக்கப்பட்டுள்ளன என்று தான் நான் நம்புகின்றேன். ஆயினும் எழுத்து வடிவில் அவற்றை வைப்பதிலே சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. சாதக பாதகங்கள் ஆராயப்பட்டன. ஆகவே இது ஒன்றும் நிபந்தனையற்ற ஆதரவு அல்ல. இதில் நாங்கள் தெளிவாக இருந்தோம் - இருக்கின்றோம்.

கேள்வி - அரசுக்கு ஆதரவை வழங்கி எதையாவது சாதித்திருக்கின்றீர்களா? தொடர்ந்தும் அரசிற்கு ஆதரவை வழங்கப் போகின்றீர்களா?

**பதில்** - எங்கள் கோரிக்கைகள் அவை தொடர்பான எதிர்பார்ப்புகள் எந்த அளவிற்கு ரணில் விக்கிரமசிங்க அரசினாலே நிறைவேற்றப்படும் என்பதை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்த விடயத்தில் தான் நாங்கள் அரசுக்குப்போதிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்பது எங்கள் கருத்து.

அதைவிடுத்து வெறுமனே அரசுக்கு நல்ல பிள்ளையாக இருக்க முடியாது. அரசுக்கு கடுமையான அழுத்தத்தை நாங்கள் கொடுக்க வேண்டும். அதை நாங்கள் கொடுப்போமானால் அரசு எங்களுடைய கோரிக்கையில் சிலவற்றையாவது நிறைவேற்றும் கட்டாயத்திற்கு தள்ளப்படும். இந்த நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் இன்னும் கொஞ்சக் காலம் தான்.

ஆகவே இதற்குள்ளே நாங்கள் காப்பாற்றிக் கொண்டிருக்கிற அரசின் ஊடாக எமது மக்களுக்கு ஒரு சில விடயங்களையாவது சாதித்துக் கொடுக்க முடியுமா என்பது தான் கேள்வி. அதைச் செய்ய அரசால் முடியாது என்றால் இந்த அரசை தொடர்ந்தும் நாங்கள் ஆதரித்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே இந்த விடயத்திலே செயற்பட வேண்டியதும் முடிவெடுக்க வேண்டியதும் கூட்டமைப்பு தான்.

வெறுமனே அரசு கொட்டிக் கொடுக்கின்ற முப்பது கோடி ரூபாக்களோடு எங்களை நாங்கள் மட்டுப்படுத்திக் கொள்வோமாக இருந்தால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாக இருக்கும். அது மாத்திரமல்லாமல் கூட்டமைப்பின் அரசியல் தற்கொலையாகவும் இருக்கும். அந்த நிலைமைக்குள்ளே நாங்கள் ஒரு போதும் எங்களுடைய கட்சியை அனுமதிக்க மாட்டோம். அல்லது எங்கள் கட்சியை தள்ள மாட்டோம்.

இதனைத் தெளிவாக அனைவரும் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகின்றேன். அதே நேரம் தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும் அனைத்து நனடவடிக்கைகளுக்கும் கண்ணை முடிக்கொண்டு அதன் பின்னால் நாங்கள் இழுப டுவதாக எவராவது கருதினால் அது தவறானது என்பதை நாங்கள் இங்கே அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை திங்கட்கிழமை சிவராத்தரி தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**

# சிவராத்திரி மகிமை

# வேடனுக்கு காட்சி கொடுத்தார் சிவன்!

மகாசிவராத்திரி தினத்தன்று நான்கு கால அபிஷேகம், பூஜையில் கலந்து கொண்டால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என்கின்றன புராணங்கள். இதனை கதைகள் மூல்மாகவும் மக்களுக்கு சொல்லிவைத்துள்ளனர். புராணங்களில் மகாசிவராத்திரியைப் பற்றி பல்வேறு கதைகள் கூறப்பட்டாலும் வேடனுக்கு சிவன் காட்சியளித்த கதை கொஞ்சம் விசேமானது.

மகாசிவராத்திரி தினத்தில் வியாதன் என்ற வேடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். சிவராத்திரியைப் பற்றி அவனுக்குத் தெரியாது. நாள் முழுவதும் அலைந்தும் ஒரு விலங்கு கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. பசியால் வாடிக் கொண்டிருக்கும் தன் குடும்பத்தினரை எண்ணி நொந்தவாறு திரும்பிக்கொண்டிருந்த அவன், வழியிலிருந்த நீர்நிலையில் நீர் அருந்தினான். ஏதாவது விலங்கு அந்த நீர்நிலைக்கு வரும். அதைக் கொன்று எடுத்துச்செல்லலாம் என்ற நம்பிக்கையுடன், சிறிது நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு அருகிலிருந்த மரத்திலேறி உட்கார்ந்துகொண்டான். அது வில்வ மரம் என்பதும், அதன்கீழ் ஒரு சிவலிங்கம் இருப்பதும் அவனுக்குத் தெரியாது.

வேடன் உறங்காமல் வரப்போகும் விலங்கிற்காகக் காத்திருந்தான். அப்போது ஒரு பெண் மான் நீர்நிலைக்கு வந்தது. அது முதல் சாமம் முடிவடையும் நேரம். மானைக் கண்ட வேடன் அம்பை எடுத்து வில்லில் பூட்டினான். அவனது அசைவினால் ஒரு வில்வ இலையும் சிறிது தண்ணீரும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்தன. வேடன் தன்னை குறிபார்ப்பதை அறிந்த மான், "வேடனே, என் இளம்குட்டிகள் என்னை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும். தயவுசெய்து என்னைக் கொல்லாதே" என்று வேண்டியது. அதற்கு வேடனோ, மானே, என் குடும்பத்தினரின் பசியைப் போக்கவேண்டியது எனது கடமை. உன்னைக் கொல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை" என்றான்.


அதற்கு அந்தப் பெண்மான், "அப்படியென்றால் எனக்கு கொஞ்சம் அவகாசம் தாருங்கள். என் குட்டிகளை இளைய பெண்மானிடம் ஒப்படைத்துவிட்டு வந்துவிடுகிறேன். என்னை நம்புங்கள். என் குட்டிகள்மீது சத்தியம்' என்றது. மானின் வேண்டுகோளுக்கு வேடன் இசைந்தான்.

மான் தன் இருப்பிடம் நோக்கி ஓடியது. அந்த மானை எதிர்பார்த்து தூங்காமல் காத்துக்கொண்டிருந்தபோது, மற்றொரு பெண் மான் தண்ணீர் பருக வந்தது. அதைக்கொல்ல அம்பை எடுத்த போது வில்வ இலையும் தண்ணீரும் லிங்கத்தின்மீது விழுந்தன. அது இரண்டாவது சாமம் முடிவடையும் நேரம்.

ஓசையைக் கேட்டு நிமிர்ந்து பார்த்த மான் வேடன் தன்மீது குறிவைப்பதைக் கண்டு திகைத்து. "வேடனே, என்னைக் கொல்லாதீர்கள். என் மூத்தாளைத் தேடி இங்குவந்தேன். அவள் குட்டிகள் என் பொறுப்பில் இருக்கின்றன. அவற்றை அவளிடம் ஒப்படைத்துவிட்டு வந்துவிடுகிறேன். பிறகு நீங்கள் என்னைக் கொல்லலாம்' என்றது. வேடன் அதற்கும் அனுமதி தந்தான்.

மூன்றாம் சாமம் முடியும் வேளையில் ஓர் ஆண் மான் நீர் பருக வந்தது. அதைக் கண்ட வேடன் வில்லை எடுத்தபோது, வில்வ இலையும் சிறிது நீரும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்தன. வேடன் தன்னைக் கொல்லப் போவதை அறிந்த ஆண் மான், "ஐயா, என் இரு மனைவிகளையும் குட்டிகளையும் தகுந்தவரிடம் ஒப்படைத்துவிட்டு வந்துவிடுகிறேன். பிறகு என்னைக் கொல்லுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டது. அதற்கும் அனுமதியளித்த வேடன், அந்த மான்கள் ஒன்றின்மீது ஒன்று வைத்திருக்கும் பாசத்தை எண்ணி வியந்தபடி, மான்களை எதிர்பார்த்து உறங்காமல் மரத்தில் அமர்ந்திருந்தான்.

தாங்கள் இருப்பிடம் திரும்பிய மான்கள் நடந்த நிகழ்ச்சியைத் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டன. "வேடனுக்கு பலியாக நான் செல்கிறேன்" என்று ஒரு மான் சொல்ல, "இல்லை, நான்தான் போவேன்" என்றது இன்னொன்று. இப்படி மூன்று மான்களுமே விவாதித்தன. ஒருவர் உயிரைத் தியாகம் செய்து மற்ற இருவர் உயிர் வாழ்வதைவிட தங்கள் சத்தியத்தைக் காப்பாற்ற மூவருமே வேடனிடம் செல்வதென்று தீர்மானித்தன. பெற்றோர்கள் பலியாகச் செல்லும்போது தாங்களும் உயிர்வாழ விரும்பவில்லை எனக்கூறி, குட்டி மான்களும் அவற்றைப் பின் தொடர்ந்து சென்றன.



நான்காவது சாமம் முடிவடையும் நேரம். மான்கள் கூட்டமாக வருவதைக் கண்ட வேடன் மகிழ்ந்து வில்லையும் அம்பையும் எடுத்தபோது. சிவலிங்கத்தின்மீது தண்ணீரும் வில்வ இலையும் விழுந்தன. நான்கு சாமங்களிலும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்திற்கு பூஜை செய்கிறோம் என்றோ, பூஜையின் மகிமை பற்றியோ அறியாமல் வேடன் பூஜை செய்திருக்கிறான். நித்திரையின்றி செய்த இந்த பூஜையின் காரணமாக சிவனருள் கிட்டி, அவனுக்கு ஞானம் பிறந்தது.

அப்போது சிவபெருமான் அங்கு காட்சியளித்து, வேடனே, உன்னையறியாமல் செய்திருந்தாலும், சிவராத்திரி விரதமிருந்த பலன் உன்னைச் சேரும். அதன்காரணமாக உனக்கு தரிசனம் தந்தேன். நீ வேண்டும் வரத்தைக் கேட்கலாம்' என்றார்.

ஈசனைப் பணிந்த வேடன், ஐயனே, என் பாவங்களைப் போக்கியருள வேண்டும்' என்றான். அவ்வாறே அருளிய சிவ பெருமான், பல செல்வங்களையும் அவனுக்கு வழங்கி, "வேடனே, இனி உன் பெயர் குகன் என்று வழங்கப்படும். ஸ்ரீமந் நாராயணன் சிறிதுகாலத்தில் இப்பூவுலகில் பிறந்து இங்குவருவார். அவர் உன்னை சகோதரராக ஏற்றுக்கொள்வார்" என்று ஸ்ரீராமர் அவதாரத்தை குறிப்பிட்டுக் கூறி, சிவராத்திரி விரதத்தின் மகிமையை விவரித்து மறைந்தார்.

சிவ தரிசனம் கிட்டிய அந்த மான்களும் மிருக உடலை விடுத்து திவ்ய ரூபம் பெற்று சிவபதவி அடைந்தன. வியாதன் என்ற வேடன் பூஜித்த லிங்கம் வியாதேஸ்வரர் என்று பெயர் பெற்றதாக வரலாறு.

---

# சர்வதேச தரத்தில் யாழ்ப்பாணத்தில்

# இருதய சத்திர சிகிச்சை

ஒரு நாட்டின் சுகாதாரத் துறையின் வளர்ச்சியை, வைத்திய சாலைகளின் தரத்தை நிர்ணயிப்பதில் அங்கு மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சைகளே பிரதான பங்கு வகிக்கின்றன. ஒரு வைத்தியசாலையில் திறந்த இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுமாயின் அந்த வைத்தியசாலையின் தரம் உயர்ந்த நிலையில் உள்ளதாகக் கருதப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு 4 நாள் பயணமாக கனடாவிலிருந்து இருதய சத்திர சிகிச்சை நிபுணர், பேராசிரியர் வைத்தியர் றொபேட் ஜேம்ஸ் குசிமனோ இந்த வாரம் வருகை தந்தார்.

இவர், இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி முகுந்தன் குழுவினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட திறந்த இருதய சத்திர சிகிச்சையை - இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான இருதய



மாற்றுவழி சத்திர சிகிச்சையை சத்திர சிகிச்சைக் கூடத்திலிருந்து நேரடியாக அவதானித்தார்.

இருதய சத்திர சிகிச்சை தீவிர கண்காணிப்புப் பிரிவு, இருதய சிகிச்சை விடுதி, இருதய கதிரியக்க ஆய்வு கூடம் ஆகியவற்றுக்கும் சென்று அவதானித்தார்.

பேராசிரியர் குசிமனோ அவர்கள் 27.02.2019 அன்று யாழ்ப்பாண மருத்துவச்சங்கம் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் வைத்தியர்கள், மருத்துவ மாணவர்களுக்கு உலகளவில் இருதய சத்திர சிகிச்சையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி, இருதயத்தில் ஏற்படும் கட்டிகளுக்கான நவீன அறுவைச் சிகிச்சை தொடர்பில் விரிவுரை ஆற்றியிருந்தார்.

இவ் விரிவுரையின் நிறைவில் யாழ்ப்பாணத்தில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைகளைச் செய்து வருகின்ற இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி முகுந்தன் மேற்கொள்ளும் சத்திர சிகிச்சை உலகின் முதல் தரமான இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் கனடாவின் றொரான்டோ பொது வைத்தியசாலையில் செய்யப்படுகின்ற சத்திர சிகிச்சைகளுக்கு இணையானது என்றும் வைத்திய நிபுணர் முகுந்தன் வடபகுதியில் வசிக்கும் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணர் என்றும் பாராட்டியிருந்தார். அத் துடன் கனடா நாட்டு நாணயம் பொறிக்கப் பட்ட பதக்கம் ஒன்றையும் முகுந்தனுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

**இருதய சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தனுக்குப் பாராட்டு**

இருதய சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் றொபேட் ஜேம்ஸ் குசிமனோ உலகின் பல பாகங்களுக்கும் சென்று இருதய சத்திர சிகிச்சையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி, இருதயத்தில் ஏற்படும் கட்டிகளுக்கான நவீன அறுவைச் சிகிச்சைகள் தொடர்பில் பயிற்சிகளையும் விரிவுரைகளையும் வழங்கி வருகின்றமையுடன், பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்படும் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைகளை அவதானித்தும் வருகின்றார்.

வைத்தியர் றொபேட் ஜேம்ஸ் குசிமனோ அவர்கள் உலகின் முதல் தரமான வைத்தியசாலைகளில் ஒன்றாக விளங்கும் றொராண்டோ பொது வைத்தியசாலையின் பீற்றர் முங்க் இருதய சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளராகவும் றொராண்டோ பல்கலைக்கழகத்தின் சத்திரசிகிச்சைப் பிரிவின் இணைப் பேராசிரியராகவும் விளங்குகின்றார்.

இவர் 2006 இல் சீனாவின் சிங்சியாங் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் (Xinxiang Medical University in China) அழைப்பின் பேரில் சீனாவுக்குச் சென்று இருதய சத்திர சிகிச்சைப் பயிற்சிகளை மருத்துவர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கினார். சீனாவில் இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொண்ட சீனரல்லாத முதல் வெளிநாட்டு வைத்திய நிபுணர் (the first non - Chinese Physician) றொபேட் ஜேம்ஸ் குசிமனோ ஆவர். 2006 இல் இவர் மேற்கொண்ட இருதய சத்திர சிகிச்சை படிமுறைகளை 10 கோடி சீனர்கள் தொலைக்காட்சி மூலமாக நேரடியாகப் பார்வையிட்டனர்.

இருதய சத்திர சிகிச்சை நிபுணர் குசிம னோவின் சேவையைக் கௌரவித்து சிங்சியாங் மருத்துவப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை



வழங்கியது. ஜேம்ஸ் குசிமனோ அவர்களது யாழ்ப்பாணம் வருகைக்கு அனைத்துலக மருத்துக்குழுவின் கனடா நாட்டுக் (IMHO Canada) கிளை அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 20.12.2017 இல் முதற்றடவையாக வைத்திய நிபுணர் முகுந்தன் தலைமையிலான குழுவினர் திறந்த இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர். இருதய சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தன் இதுவரை 100 இற்கும் அதிகமான இருதய சத்திர சிகிச்சைகளை மிகக் குறைந்த வளங்களைக் கொண்டு, நிறைவேற்றியுள்ளார். யாழ். போதனாவில் 1000 இற்கும் அதிகமானவர்கள் இருதய சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றார்கள்.

# 'நஞ்சாங்கம்' தடை செய்யப்படுமா?

16 வகையான செல்வங்களைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வதற்காகவே சுப முகூர்த்தத் தில் கலியாணம் செய்கிறார்கள். இப்படி நடந்த திருமணங்களில் பல இன்று விவாகரத்து....விபச்சாரம் என்ற நிலையில் உள்ளன. அப்படி என்றால், ஏன் சுப முகூர்த் தம் பார்க்க வேண்டும்? இதில் பலன் இல்லையா? சுப முகூர்த் தம் சுபத்தைக் கொடுக்கும். நஞ்சு முகூர்த்தம் சுபத்தைக் கெடுக்கும். நஞ்சு முகூர்த்தமா? அது எங்கே விளைகிறது. கொக்குவிலில், வாக்கிய நஞ்சாங்கத்தில!

நஞ்சாங்கமா? புதிதாக இருக்கிறதே! கைம்பெண், விபசாரி, போதை வஸ்து, வாள்வெட்டுப் பலன் முகூர்த்தங்கள் உள்ளதை வேறு எவ்வாறு அழைப்பது? அது சரி, இதற்கும் போதை வஸ்துக்கும் சம்பந்தமா? அப்படி என்றால், இதை விட்டு வைக்க மாட்டார்களே! ஏன் இன்னும் தடை செய்யாமல் இருக்கிறார்கள்? போதை வஸ்துவைவிடக் கொடியது சுத்தப் பிழையான பஞ்சாங்கம். போதை வஸ்து பாவிப்பவரை மட்டும் அழிக்கும். ஆனால், முழுப் பிழையான பஞ்சாங்கம் இலங்கைச் சைவத் தமிழ் இனத்தையே அழித்து விடும்.

குழந்தை பிறந்த நேரத்திற்கு ஜனன ஜாதகம் எழுதியும், சிறுமி பூப்படைந்த நேரத்திற்குருது ஜனன ஜாதகம் எழுதியும் பலன் பார்க்கிறீர்கள். இதே போன்று, வருங் காலத்தில் நிகழப்போகும் விவாஹம், வீடு குடி புகுதல்... போன்ற சுப கருமங்களுக்கு ஜாதகம் எழுதிப் பலன் பார்க்க முடியாதா? ஆம்! முடியும். இவ்வாறு கணித்தே சுப முகூர்த்தங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. சுப் கருமங்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு விதிமுறைகள் உள்ளன.

மிக முக்கியமான விவாஹ முகூர்த்த விதிகளை மட்டும் குறிப் பிடுகிறேன். லக்கினமே சுப் முகூர்த்தத்தின் உயிர். ஜாதகம் கணிப்பது போன்று, முகூர்த்த நேரக் கிரகநிலையைக் குறித்து, லக்கினத்தை (1ம் இடத்தை) நிர்ணயிக்க வேண்டும். அட்டவணை 1ஐப் பாருங்கள். விவாஹத்திற்கு 7ம் இடம் சுத்தமாக, எந்தவொரு கிரகமும் இல்லாதிருக்க வேண்டும். இதனை மீறினால் விளையும் துற்பலன்கள் ஆதாரம் 1, 2ல் உள்ளன. இவ்விதியை மீறிய வாக்கிய விவாஹ முகூர்த்தப் பிழைகள் அட்டவணை 2ல் உள்ளன. இன்னும் பல பிழைகளும் இருக்கின்றன. அனைத்தையும் உள்ளடக்க இங்கு இடம் போதா. 2017ல் வெளிவந்த வாக்கியத்தில் அட்டவணை 2ல் இருப்பது போன்ற பிழைகள் 25ற்கு மேல் இருந்தன.

விவாஹ முகூர்த்தத்தில் களஸ்த்திரகாரகன் சுக்கிரன் 6லும், மாங்கல்யகாரகன் செவ்வாய் 8லும் இருக்கக்கூடாது. இவற்றை மீறினால் நிகழும் துற்பலன் ஆதாரம் 3ல் உள்ளது. அட்டவணை 2ல் இவ்விதியை மீறிய வாக்கிய விவாஹ முகூர்த்தப் பிழைகளும் உள்ளன.

**அட்டவணை 1 - விவாஹ முகூர்த்த ஜாதகம் 14-07-2019**

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 சூரியன் புதன் சுக்கிரன் ராகு |
| 2 | வாக்கிய பஞ்சாங்க விவாஹ முகூர்த்த நவக்கிரக நிலை<br>ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை 14-07-2019<br>முகூர்த்த லக்கினம் மகரம்<br>06:50 p.m. முதல் 08:34 p.m. | | 7 செவ்வாய் |
| 1 ல | விவாஹ முகூர்த்த பலன்<br>6ல் சுக்கிரன் → வாழ்க்கைத்துணை மரணம்<br>7ல் செவ்வாய் → விபச்சாரி | | 8 |
| 12 சந்திரன் சனி கேது | 11 வியாழன் | 10 | 9 |

**அட்டவணை 2 → மிகக் கொடிய தோஷ விவாஹ முகூர்த்தங்கள் - வாக்கிய பஞ்சாங்கம்**

| Date | லக்கினம் | ம.பி. முதல் | ம.பி. வரை | தோஷத்திற்குக் காரணம் → பலன் |
|---|---|---|---|---|
| 26-Apr-19 | கடகம் | 12:03 PM | 01:21 PM | 7ல் சந்திரன் → தரித்திரி |
| 11-Jul-19 | மகரம் | 07:01 PM | 07:35 PM | 6ல் சுக்கிரன் → வாழ்க்கைத்துணை மரணம், 7ல் செவ்வாய் → விபச்சாரி |
| 14-Jul-19 | மகரம் | 06:50 PM | 08:34 PM | |
| 05-Sep-19 | கும்பம் | 05:19 PM | 06:51 PM | 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → திருவிலி 7ல் செவ்வாய் & சுக்கிரன் → விபச்சாரி |
| 15-Sep-19 | மீனம் | 06:23 PM | 07:53 PM | 7ல் புதன் → திருவிலி, 7ல் சுக்கிரன் → விபச்சாரி |
| 16-Sep-19 | மீனம் | 06:19 PM | 07:29 PM | |
| 29-Jan-20 | கன்னி | 09:22 PM | 11:08 PM | 6ல் சுக்கிரன் → வாழ்க்கைத்துணை மரணம், 7ல் சந்திரன் → தரித்திரி |
| 30-Jan-20 | கன்னி | 09:18 PM | 11:04 PM | |
| 05-Feb-20 | கன்னி | 08:53 PM | 10:39 PM | 7ல் சுக்கிரன் → விபச்சாரி |
| 06-Apr-20 | கடகம் | 12:41 PM | 01:37 PM | 7ல் செவ்வாய் → விபச்சாரி, 7ல் குரு → புருஷனை அவமதிப்பாள் |
| 13-Apr-20 | கடகம் | 12:14 PM | 02:12 PM | |
| 13-Apr-20 | கன்னி | 04:25 PM | 06:11 PM | 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → திருவிலி |

இவற்றைவிட மேலும் பல பிழைகள் உள்ளன. இவை இவ்வருடம் புதிதாக முளைத்தவை அல்ல. கடந்த 20, 30 வருடங்காகத் தொடர்கின்றன. வாழ்வின் மிக முக்கியமான விவாஹ முகூர்த்தத்திலேயே இந்தளவு பிழைகள் என்றால், வீடு குடி புகுதல், காது குத்தல்,... போன்ற ஏனைய முகூர்த்தங்களில் எந்தளவு பிழைகள் இருக்கும் என்று சொல்லியா தெரிய வேண்டும்.

விவாஹ முகூர்த்தத்தில் சந்திரன் 7ல் மட்டுமல்ல, 1, 6, 8, 12ல் இருப்பதும் நல்லதல்ல. இதன் தோஷம் ஒப்பீட்டளவில் சற்றுக் குறைவானது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் 1ல் வளர்பிறைச் சந்திரன், 6, 8, 12ல் சந்திரன் இவற்றின் தோஷ நிவர்த்திக்குப் பிரீதியுடன் தரம் குறைந்த விவாஹ முகூர்த்தம் நிச்சயிப்பதுண்டு.

வாக்கியத்தினர் சிறந்த சுப முகூர்த்தங்கள் பலவற்றைக் குறிப்பிடாது கோட்டை விட்டுள்ளனர். சில நூல்களில் உள்ளவாறு விவாஹ முகூர்த்தத்திற்கு 8ம் இடம் சுத்தம் என்றொரு விதி உள்ளதா? 7, 8 இவை இரண்டுமே சுத்தம் என்றால், நவக்கிரகங்கள் எங்கே போய் இருப்பது? இது நடைமுறைச் சாத்தியம் மிகவும் குறைந்தது. விவாஹ முகூர்த் தத்திற்கு 7ம் இடம் சுத்தம் என்ற விதி இல்லாத முகூர்த்தசாஸ்த்திரநூல் எதுவுமே கிடையாது. விவாஹ முகூர்த்தத்தில் 8ல் செவ்வாய் இருக்கக் கூடாது. 8ல் சூரியன், சுக்கிரன், சனி, ராகு, கேது இருக்கலாம். 8ல் சந்திரன், புதன், குரு இருப்பது நல்லதல்ல.

இதனைத் தவிர்க்க முடியாவிடில் தோஷ நிவர்த்திற்குப் பிரீதியுடன் தரம் குறைந்த முகூர்த்தம் நிர்ணயிக்க வேண்டும். 8ல் சூரியன், சனி இவை உத்தமம் என்று காலப்பிரகாசிகையில் உள்ளது. விவாஹ முகூர்த்தத்திற்கு மிக விசேமான 10க்கும் மேற்பட்ட, மிகமிக அபூர்வமாக வரும் யோகங்கள் உள்ளன. இதில் சிலவற்றில் 8ல் சூரியன், சுக்கிரன் உள்ளது. 1ல் குரு, 8ல் சுக்கிரன், 11ல் சூரியன், அஸ்தமனமற்ற புதன் இருப்பது மஹேந்திர யோகம். 2ல் சுக்கிரன், 6ல் சனி, 8ல் சூரியன், 12ல் குரு இருப்பது ஸ்ரீமதி யோகம்.

வாக்கியத்தில் ஸ்கந்தஷ்டி, நவராத்திரியில் பிழைகள் வழமை போல் தொடர்கின்றன. மாதாந்த விரதங்களிலும் பிழைகள் உள் ளன. சதுர்த்தி விரதம் 20-07-15 சரி 19 - 07 - 15 பிழை, சங்கடஹர சதுர்த்தி விரதம் 13 - 01 - 20 சரி 14 - 01 - 20 பிழை, ஷஷ்டி விரதம் 11 - 04 - 19 சரி 10 - 04 - 19 பிழை. அமாவாசை விரதம் - சிராத்தம் 04 - 04 - 19 சரி 05 - 04 - 19 பிழை, பூரணை விரதம் - சிராத்தம் 08 - 02 - 20 சரி 09 - 02 - 20 பிழை, ஏகாதசி விரதம் 06 - 03 - 20 பிழை 05-03-20 ஸ்மார்த்த ஏகாதசி 06 - 03 - 20 வைஷ்ணவ ஏகாதசி என்பதே சரி. விரத நிர்ணய விதிமுறை தெரியாமையால் இப்பிழைகள் ஏற்பட்டன. ஆதாரத்திற்குத் தமிழகத்துப் பாம்புப் பஞ்சாங்கத்தைப் பாருங்கள்.

(மிகுதி அடுத்த வாரம்)

**ஆதாரம் 1 - காலப்பிரகாசிகை 81ம் பக்கத்தின் ஒரு பகுதி**
**Google: kalaprakasika 1982. English edition by N. Iyer**

Planets in the 7th House—There should be no planet in the 7th house. If there be, the adverse effects are as follow:—Jupiter makes the woman disrespectful to her husband; Mercury breeds indifference to religious formalities; Venus shows bad conduct; Mars indicates adultery on the part of the woman; Saturn affects the life of the children; Kethu gives the woman the disposition of a maniac; the Sun hastens widowhood; Rahu causes poverty; the Moon brings all miseries. For these reasons the 7th house from the rising sign, at the time of marriage, should be vacant.

**ஆதாரம் 3 - C. G. Rajan எழுதிய காலவிதானம் 31ம் பக்கத்தின் ஒரு பகுதி**

135. லக்னத்திற்கு 8-ல் செவ்வாய் அல்லது 6-ல் சுக்கிரன் அல்லது 6-8-12 லக்கினத்தில் சந்திரன் இருக்க விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்தவன் யமதூதனாவான்.

**ஆதாரம் 2 - இ. சி. இரகுநாதஐயர் உரை எழுதிய விதானமாலை 98ம் பக்கத்தின் ஒரு பகுதி**

சுபக்கோளாயினும் பாபக்கோளாயினும் ஏழாமிடத்தில் நிற்கில் ஆகார் எ-று. (29)

இ-ள்: விசேஷித்துப் பொல்லாதென்றவிடங்களில் நின்ற கிரகங்களால்வருந் தீமைகளாவன: சுக்கிரன் நிற்கில் பரத்தை, வியாழன் நிற்கில துறவி, ஆதித்தன் நிற்கில் விதவை, செவ்வாய் நிற்கில் துஷ்டை, சனிநிற்கில் மலடி, சந்திரன் நிற்கில் தரித்திரி, புதன்நிற்கில திருவிலி, இராகுநிற்கில் மரித்தல், கேதுநிற்கில் வியாதியாம் எ-று.

# தடுமாறி வருகின்றது ...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி** - இடைக்கால அறிக்கையை நிராகரிக்கிறது. போர்க்குற்றம் தொடர்பில் ஜெனீவாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்று ரெலோ சொல்கிறது. ஆனால் தமிழரசுக் கட்சி இந்த இரண்டிலும் மாறுபட்ட கருத்தை கொண்டுள்ளது. இதே நிலை கூட்டமைப்புக்குள் தொடருமா? ஆவ்வாறு தொடர்ந்தால் முடிவு என்னவாக இருக்கும்?

**பதில்** - இந்தக் கேள்வியிலையே பதில் உள்ளது. அதாவது கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டிற்கும் ரெலோவின் நிலைப்பாட்டிற்கும் இடையே முரண்பாடுகள் உள்ளன அல்லது ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கேள்விக்காக நன்றி கூற வேண்டும். இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது.

நாங்கள் ஒன்றாகப் பயணிப்பதாக இருந்தால் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக அதில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளும் செயற்பட வேண்டும். அவ்விதம் செயற்படவில்லை என்றால் அல்லது அவ்வாறு செயற்பட முடியவில்லை என்றால் நாங்கள் கூட்டமைப்பாகத் தொடர்ந்து பயணிக்க முடியாது. இதிலே வேறெந்த தெரிவும் இல்லை.

**கேள்வி** - இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்** - ஐக்கிய இலங்கைக்குள்ளே நேர்மையான நிலையான அரசியல் தீர்விற்குச் சிங்கள அரசியல் தலைமை தயாராக இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட சிதைப்பதில் தான் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள். அதிகாரத்திற்காகப் போட்டியிடும் பிரதான சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை உதாசீனப்படுத்துவதிலே ஒற்றுமை கண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையிலே அரசியல் தீர்வு இந்த நாடாளுமன்றக் கால கட்டத்திலே வராவிட்டாலும் அடுத்த நாடாளுமன்ற காலத்திலே வரும் என்றெல்லாம் நாங்கள் அதீத நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு எவ்வளவு தூரம் அவசயமோ அது போல சிங்கள மக்களுக்கும் அவசியம்.

அதை உணர்ந்து சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் இறங்கி வரவில்லை என்றால் பௌத்த சிங்கள ஆதிக்கச் சிந்தனையில் இருந்து அவர்கள் விடுபடத் தயாரில்லை என்றால் நாங்கள் மீண்டும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே தனித் தமிழீழக் கோரிக்கையை - சுதந்திரத் தமிழீழக் கோரிக்கையைக் - கையிலெடுப்பது பற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டி வரும்.

வெறுமனே எட்டப்பட முடியாத அரசியல் தீர்விற்காக நாங்கள் கனவு கண்டுகொண்டிருக்க முடியாது. யதார்த்தமாக நாங்கள் சிந்திக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள்ளே தீர்வு வராது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு தொடர்ந்தும் நாங்கள் தள்ளப்படுவோமாக இருந்தால் தமிழீழத்திலே சர்வஜன வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபையினுடைய மேற்பார்வையோடும் அனுசரணையோடும் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் எங்களது பிரதான அரசியல் கோரிக்கையாக முன்வைத்து எங்கள் மக்களுடைய ஆதரவைக் கோர வேண்டி ஏற்படும்.

அதிலே எந்த விளைவுகளையும் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்கள் அரசியல் இலக்கு என்பது எமது மக்களுடைய விடுதலை. ஐக்கிய இலங்கைக்குள்ளே தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிற்கு பூரண சுயாட்சி என்பது சாத்தியம் இல்லை என்றால் தமிழீழம் என்பது தனிநாடாக பிரகடனப்படுத்துவதன் மூலமே சாதிக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதுவொன்றும் புதுமையான விடயங்கள் அல்ல. ஏதோ புரட்சிகரமானதும் அல்ல. எங்களுக்கு இயல்பாக உள்ள ஒரு தனியான தேசம் தனியான மக்கள் கூட்டம் என்ற முறையிலே சர்வதேச சட்டத்திற்கமைய எமது மக்களுக்குள்ள பிறப்புரிமை என்பது சுநிர்ணய உரிமை என்று கூறப்படுகிறது. அந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழத்தை எங்கள் தாயகத்தை தனிநாடாக்க நாங்கள் விரும்புகிறோம் என்று கோருவதற்கு எங்களுக்கு சகல உரிமைகளும் உண்டு.

அந்த உரிமையை நாங்கள் இப்பொழுது கையில் எடுக்கவில்லை என்பது உண்மை தான். எடுக்கப் போகிறோமா இல்லையா என்பதை நாங்களோ எமது மக்களோ தீர்மானிக்கப் போவதில்லை அதிகார அரசியல் வெறி கொண்டு அலைகிற பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் தலைவர்களும் தான் அதைத் தீர்மானிப்பார்கள். அந்தக் கேள்வி ஒரு சவாலாக எங்களுக்கு முன்னாலே கட்டாயமாக வரும். அதை நாங்கள் சந்திப்போம். தமிழ் மக்களும் சந்திப்பார்கள். *

### இந்தியா - பாகிஸ்தான் போர் தேவையில்லை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு இடையில்; பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் நோபல் அமைதி விருது பெற்ற மலாலா அனைவருக்கும் போரின் கொடுமைகள் தெரியும். பழிவாங்குவதும் பதிலடி தாக்குதல்களும் ஒருபோதும் தீர்வாகாது. போர் ஆரம்பித்துவிட்டால் அது அழிவில்தான் முடியும். தற்போது உலகின் வேறு நாடுகளில் போரின் ஆபத்தில் சிக்கியுள்ள மக்களை இவ்வுலகம் கண்டு கொள்ளவில்லை என்கிறார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான் 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.


### இந்தியா - பாகிஸ்தான் பேச்சை ஆதரிக்க வேண்டும்

பாகிஸ்தான் பிரதமரும் இந்திய பிரதமரும் இத்தருணத்தில் உண்மையானத் தலைமைப் பண்பை காண்பிக்க வேண்டும். இருவரும் பேச்சு வார்த்தை வழியே தற்போதுள்ள மோதல் பிரச்சினையை தீர்க்கவேண்டும். உயிரிழப்புகளை தவிர்க்க இந்தியா - பாகிஸ்தான் பேச்சு வார்த்தையை பன்னாட்டு அரசுகள் ஆதரிக்க வேண்டும் என நோபல் விருது பெற்ற மலாலா வேண்டியுள்ளார்.

# உரையாடல் வழியையே இந்திய - பாக். தலைவர்கள் தெரிவு செய்ய வேண்டும்

## இந்திய ஆயர் பேரவைத் தலைவர் வலியுறுத்து



இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் உரையாடல் வழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அமைதியை உரு வாக்க நாம் செபிப்போம் உழைப்போம் என்று இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் கூறினார்.

பெப்ரவரி 14ம் திகதி ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இந்திய இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்திய விமானப்படையினர் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளதையும் அதற்கு பாகிஸ்தான் இராணுவம் பதில் தாக்குதல் நடத்தியுள்ளதையும் மனதில் கொண்டு கர்தினால் கிரேசியஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்.

தீவிரவாதத்தையும் அதற்குப் பதிலிருப்பாக மேற்கொள்ளப்படும் போர் முயற்சியையும் நாங்கள் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம் என்று கூறிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள் உண்மையான அமைதி வேண்டி இந்தியாவும் பாகிஸ்தானும் மேற்கொள்ளும் உரையாடல் முயற்சிகள் தெற்கு ஆசியாவுக்கும் உலகிற்கும் பொருளுள்ள முயற்சியாக விளங்கும் என்று எடுத்துரைத்தார்.

# உண்மையின் எண்ணங்கள்

## இந்திய – பாகிஸ்தான் அமைதிக்காக ஆயர்களின் பெரும் முயற்சி

இந்தியா பாகிஸ்தான் முறுகல் நிலை ஏற்பட்டு ஒரு பெரும் யுத்தம் ஏற்படுமோ என்ற நிலையில் இந்திய பாகிஸ்தான் ஆயர்களின் அமைதிக்கான முயற்சி பாராட்டுதற்குரியது.

இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அவர்களும் பாகிஸ்தான் ஆயர் பேரவை தலைவர் பேராயர் ஜோசப் அர்த் அவர்களும் மோதல் ஆரம்பித்த உடனேயே போரின் விளைவுகளை எடுத்துரைத்து சமாதான முயற்சிகளுக்கு இரு நாடுகளும் செல்ல பன்னாட்டு அரசுகள் உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போரின் கொடூர அனுபவங்களை 3 தசாப்தங்களாக உணர்ந்தவர்கள் நாம். இனி ஒரு போர் எங்கும் வேண்டாம் என இறைவனிடம் வேண்டுவோம். இரு நாடுகளின் உறவு நிலை மேம்பட காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் செபங்களை அர்ப்பணிப்போம்.

# போர்ச் சூழலைத் தவிர்ப்பதற்கு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட இரு நாடுகளையும் பன்னாட்டு அரசுகள் வலியுறுத்த வேண்டும்

## பாகிஸ்தான் ஆயர் பேரவை தலைவர் பேராயர் ஜோசப் அர்ஷத்

போரைத் தடுப்பது முக்கியம் என்ற கருத்து பன்னாட்டளவில் ஆதரவு பெற்றுவரும் வேளையில் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் கருத்து வேறுபாடுகளை உரையாடல் வழியே தீர்ப்பதே பாகிஸ்தான் தலத்திருஅவையின் விருப்பமும் மன்றாட்டும் என்று அந்நாட்டு ஆயர் பேரவையின் நீதி அமைதிப் பணிக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அப்பாவி மக்களின் உயிர்களைப் பலிவாங்கும் போர்ச் சூழலைத் தவிர்ப்பதற்கு, பேச்சுகளில் ஈடுபட இவ்விரு நாடுகளையும் பன்னாட்டு அரசுகள் வலியுறுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் ஆயர் பேரவையின் தலைவர் பேராயர் ஜோசப் அர்ஷத் கூறினார்.

கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு அண்டை நாடுகளையும் துன்புறுத்தி வரும் காஷ்மீர் பிரச்சினை



என்ற காயத்தைக் குணமாக்காமல் இருப்பது இரு நாடுகளுக்கும் நல்லதல்லன பாகிஸ்தான் ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் ஜோசப் அர்ஷத் மேலும் கூறினார்.

இவ்விரு நாடுகளிலும் உண்மையான சமாதானத்தை விரும்பும் அனைவரும் இந்நிகழ்வுகளால் அதிக வேதனை அடைந்துள்ளனர் என்று கூறிய பேராயர் அர்ஷத் அவர்கள் இந்தப் பிரச்சினையை அறிவுபூர்வமான உரையாடல் வழியே இரு நாட்டு அரசுகளும் தீர்த்துவைத்தால் அது, உலகிற்கே சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்று கூறினார். கலாசாரம் பொருளாதாரம் வர்த்தகம் விளையாட்டு மதம் என்ற அனைத்து தளங்களிலும் இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே பரிமாற்றங்கள் உருவாகும்போது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்ற நம்பிக்கையை பாகிஸ்தான் ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் அர்ஷத் வெளியிட்டார். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் சமாதானத்திற்காக செபிப்பது நம் கடமை என்று கூறிய பேராயர் அர்ஷத் இந்த செபத்தில், இரு நாடுகளையும் சேர்ந்த இஸ்லாமியர், இந்துக்கள் அனைவரும் இணையவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# வறுமைக்கான காரணங்களை கவனத்தில் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவு பாதுகாப்பை உறுதி செய்தலும்

வறுமைக்கான காரணங்களைக் கவனத்தில் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் என்ற கருத்தமர்வு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஒழுங்கமைப்புடன் தேசிய நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார் ஆகிய மறைமாவட்டங்களைச் சேர்ந்த இயக்குநர்கள் பணியாளர்கள் தேசிய நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் அந்தந்த மறைமாவட்டத்தை சேர்ந்த வீட்டுத்தோட்ட விவசாய பயனாளிகள் உட்பட 30 பேர் பங்குபற்றினர்.

யாழ்ப்பாண கரித்தாஸ் - கியூடெக் நிறுவன



இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் வரவேற்புரையுடனும் ஆரம்பமானது. தேசிய் நிறுவனத்தின் இந்நிகழ்ச்சித் திட்ட தேசிய இணைப்பாளர் திருமதி நிலானி திசேரா அவர்களால் இந்நிகழ்ச்சித் திட்டம் பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் கூறப்பட்டது. மேலும் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் திருமதி கிருபவதனி சிவரூபன் அவர்களால் காலநிலை மாற்றத்திற்கேற்ப பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான விவசாய தொழிநுட்பங்கள் எனும் தலைப்பிலும் தொடர்ந்து சண்டிலிப்பாய் விவசாய போதனாசிரியர் குரூஸ் அவர்களால் சேனைப்படைப்புழு கட்டுப்பாட்டிற்கான தொழில்நுட்பங்களும் யாழ் மாவட்டத்தில் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டமும் எனும் தலைப்பில் பயிற்சியாளர்களுக்கான கருத்தமர்வுகள் நடைபெற்றன. யாழ் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சினியால் சந்தைப்படுத்தல் தொடர்பான யுக்திகள் எனும் தலைப்பில் கருத்தமர்வும் செயல்முறை மூலமான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பு; சேதன விவசாயமும் வீட்டுத்தோட்டமும் சம்பந்தமான பயிற்சி



வறுமைக்கான காரணத்தை கவனத்தில் கொள்ளலும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் திட்டத்தின் கீழ் கடந்த சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப்பயிற்சிப் பாடசாலையில் சேதன விவசாயமும் வீட்டுத்தோட்டமும் சம்பந்தமான பயிற்சி ஒன்று இடம் பெற்றது. இதில் அரச விவசாய அலுவலகர்கள் மட்டு அம்பாறை மற்றும் மட்டு முன்பள்ளி ஆசிரியர்கள் விவசாயிகள் கலந்து சிறப்பித்தனர். வளவாளர்களாக விவசாயப் பகுதி உத்தியோகத்தர்கள் செயற்பட்டனர். இப்பயிற்சியை ஜி. அலக்ஸ் றொபட் அடிகளாரும் பிரதி விவசாயப் பணிப்பாளர்களும் ஆரம்பித்து வைத்தனர்.



# பெண்களின் மீதான வன்முறை ஒழியாதா?

உலகத்தில் எல்லா சமூகத்திலும், சாதி, மதம் என்கிற வித்தியாசமின்றி ஒட்டு மொத்தமாக ஒடுக்கப்படுகிற ஓர் இனம் உண்டு என்றால் அது பெண்ணினமேஆகும்.

கருவிலேயே பெண் சிசுவாக இருந்தால் கருச்சிதைவிலிருந்து, பிறந்தவுடன் பெண் குழந்தையாக இருந்தால் கள்ளிப்பால் என்று வன்முறை தொடங்கி விடுகிறது. சாஸ்திர சம்பிரதாயங்கள் என்கிற பெயரில் பால்ய விவாகம், உடன்கட்டை ஏறுதல், விதவை, பொட்டுக்கட்டுதல் என்று காலங்காலமாக பெண்கள் வஞ்சிக்கப்பட்டனர்.

பெரும்பாலும் இத்தகைய வன்முறைகள், 90 சதவீதம் நெருங்கிய உறவினர்களாலோ, நண்பர்களாலோ, அக்கம் பக்கத்து வீட்டில் உள்ளவர்களாலோ, பணியிடத்திலோ, பள்ளிக்கூடங்களிலோ உள்ளவர்களால் நடத்தப்படுகிறது.

இதில் வேதனையான விடயம், பெரும்பாலான குற்றங்கள் வெளியே தெரிவதில்லை. அப்படியே வந்தாலும் செய்தித்தாள்களில் எங்கோ ஒருமூலையில் ஒதுங்கி விடுகிறது. அப்படியே அந்தச் செய்தி நாட்டையே உலுக்கினாலும், ஒரே வாரத்தில் மறக்கடிக்கப்படுகிறது.பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பல பெண்கள் கொல்லப்படுகின்றனர். இவைகள் எல்லாம் தடுக்கப்பட என்ன தான் வழி?

குற்றங்களுக்கான தண்டனைகள் கடுமையாக்கப்படவேண்டும். ஆனால் தண்டனைகள் மட்டும் குற்றங்களை முழுவதும் குறைத்துவிட முடியாது. பெற்றோர்கள் தங்களது ஆண்குழந்தைகளை வளர்க்கும் போது அவர்களிடத்தே, பெண்களும் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு சமஉரிமை உடையவர்கள்; ஆண்களுக்கு அடிமையாக, ஏவல் செய்பவர்களாக உருவாக்கப்பட்டவர்கள் அல்லர் என்கிற உண்மையை உரத்துச் சொல்ல வேண்டும்.

சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை. தைரியம், பலம், அறிவு, இவைகளை எல்லாம் ஆணுக்கு மட்டுமே உரியகுணாங்களாக சித்திரிக்கப்படுகின்றன. அத்தகைய சூழலில் வளரும் பெண் குழந்தைகள் தங்களுக்கு புத்திசாலித்தனமும் சாமர்த்தியமும் குறைவு, மற்றும் பலவீனமானவர் என்று கருதத் தொடங்கி விடுகின்றனர். உதாரணமாக, ஏதாவது பொருளைத் கைத்தவறி நழுவவிட்டால், ஆண்குழந்தை அதைபற்றிக் கவலை கொள்ளாது.


வீட்டிலும் திட்டிவிட்டு விட்டு விடுவார்கள். அதே நேரத்தில் பெண் குழந்தைக்கு திட்டு மட்டுமல்ல, உனக்கு ஏன் இந்த கடினமான வேலை என்று கூறப்படும் போது பெண் குழந்தை தன்னால் கடினமானவற்றை செய்ய முடியாது என்று நம்பத் தொடங்குகிறது.

இப்படியாக வளரும் அப்பருவத்திலேயே அதன் மனதில் நீ பலவீனமானவள் என்கிற ஆழமான விதை ஊன்றப்படுகிறது. நன்கு பயிற்சிப் பெற்றதடகள வீராங்கனையுடனோ, குத்துச்சண்டை பயின்ற பெண்ணிடமோ அவ்வாறு பயிற்சிப் பெறாத ஆண்கள் மோதி வெற்றிப் பெறமுடியாது. ஆகவே ஆணோ, பெண்ணோ, நான் யாருக்கும் சளைத்தவரல்ல என்கிற எண்ணமும், பயிற்சியும் பெற்றால் எதையும் செய்ய முடியும் என்பது தான் உண்மை.

ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்கள் பெண்களுக்கு எதிரானதாகவும் வன்முறையை தூண்டுபவையாகவும் உள்ளன. திரைப்படங்கள் போன்று தணிக்கைக்குழு இல்லையென்றாலும் சுயக்கட்டுப்பாடுகளோடு நம் வீட்டு பெண்களும் குழந்தைகளும் பார்ப்பதாக இருந்தால் எத்தகைய பொறுப்புணர்வோடு நடந்து கொள்வோமோ அந்த வகையில் நடந்து கொள்ள வேண்டும். அதேபோன்று ஊடகங்கள் பெண்களுக்கு எதிரான கருத்துகளையும் கேலி செய்யும் செய்திகளையும் வெளியிடக் கூடாது.

பெண்களையும் சகமனிதர்களாக பார்க்காமல் அவர்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய கருவியாக பார்க்கும் மனோபாவமே அடிப்படை முறையான பாலினகல்வி கொடுக்காமையும், இத்தகைய தவறான புரிதல்களுக்கு வழிவகுக்கின்றன.

மேலைநாடுகளில் மட்டுமின்றி நமது நாட்டில் கூட, பாதிக்கப்பட்ட பெண்கள் சமூக வலைத்தளங்களில்தங்களுக்கு கொடுமை இழைத் தோரை பற்றிய உண்மையை வெளியிடுவதன் மூலமாக, தவறு செய்தவர்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது. இது போன்று தவறு செய்தவர்களை வெளிப்படுத்தும் போது எதிர்காலத்தில் தவறு செய்ய முயற்சி செய்பவர்களை தடுக்க ஏதுவாகும். பெண்களுக்கு எதிராக தொடரும் இழிச் செயல்கள் முடிவுக்கு கொண்டு வர உறுதி ஏற்போம்.



# கறுப்பு சருமம் அழகானது... ஆரோக்கியமானது...



கறுப்பான சருமம் என்று கவலைப்படாமல், ஆரோக்கியமான சருமம் என்று சந்தோஷப்படுங்கள். விதவித அலங்காரங்களும், நகைகளும் களையான கறுப்பு தேகம் கொண்டவர்களுக்குத்தான் அதிகம் பொருந்தும்.

இன்றைய தலைமுறையினர், செக்கச் சிவந்த மேனியைத் தான், அழகு என்று போற்றி, அதை, பெரிதும் விரும்புகின்றனர். கறுப்பாக இருந்தாலும், களை'யாக இருப்பவர்கள் பலர் உண்டு. விதவித அலங்காரங்களும், நகைகளும் களையான கறுப்பு தேகம் கொண்டவர்களுக்குத்தான் அதிகம்பொருந்தும்.

பொதுவாக கறுப்புநிறம் கொண்டவர்களுக்கு அதிகமாக முகப்பரு வருவதில்லை. சிவப்பாக இருப்பவர்கள் பலரும், முகப் பருவால் அவதிப்படுவதை, கண் கூடாக பார்க்கலாம்.

கறுப்பாக இருப்பவர்கள், அவர்களது நிறத்திற்கும், உடல்வாகிற்கும் பொருத்தமான ஆடை, அலங்காரம் செய்து கொண்டால், அவர்களை விட அழகானவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.


வெளிர் நிறத்திலான ஆடைகள், எளிய அலங்காரம் கறுப்பானவர்களை, மேலும் அழகாகக் காட்டும். வெள்ளைக் கல் பதித்த நகைகள், தங்க நகைகள் சிவப்பானவர்களை விட, கருப்பானவர்களுக்குத் தான் எடுப்பாகத் தோன்றும்.

சருமத்திற்கும் உணவு தேவைப்படு கிறது. வாரத்தில் ஒரு நாளாவது, சருமத்திற்கு முல்தானி மெட்டி, சந்தனம், தயிர், மஞ்சள், அரிசி மாவு, தக்காளிச் சாறு, எலுமிச்சைச் சாறு போன்ற எதையாவது ஒன்றை தடவி, ஊற விட்டு, கழுவி வந்தால் இயற்கை மற்றும் எளிய முறையில் உங்கள் அழகைப் பேணலாம்.


கறுப்பான சருமம் என்று கவலைப்படாமல், ஆரோக்கியமான சருமம் என்று சந்தோப்படுங்கள். அதுதான் உண்மை. நீங்கள் கறுப்பான தேகம் கொண்டவர் என்றால், அதுபற்றிய தாழ்வு மனப்பான்மை உங்களுக்கு இருந்தால், இன்றே மறந்துவிடுங் கள். கறுப்பே சிறந்த அழகு!

## வாரமொரு சமையல்

# சுவையான சத்தான பனங்கிழங்கு புட்டு



பனங்கிழங்கில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், இதை உண்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இன்று பனங்கிழங்கில் புட்டு செய்வது எப்படி?



**தேவையான பொருள்கள்**

பனங்கிழங்கு - 3
சின்ன வெங்காயம் - 10
பச்சை மிளகாய் - 3
பூண்டு - 2 பல்
சீரகம் - கால் தேக்கரண்டி
மஞ்சள்தூள் - கால் தேக்கரண்டி
தேங்காய் துருவல் -2 மேசைக்கரண்டி
கடுகு, உளுத்தம்பருப்பு -தலா கால் தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

சின்ன வெங்காயம், ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். மிக்சியில் சீரகம், தேங்காய் துருவலை போட்டு கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

பூண்டு, மஞ்சள்தூள் இரண்டையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்த மஞ்சள் விழுதை தோல் சீவிய பனங்கிழங்கில் தடவி வேகவிடவும்.

வெந்தவுடன் நாரை உரித்துவிட்டு மிக்சியில் போட்டு கொரகொரப்பாக பொடித்து கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுத்தம்பருப்பு, கீறிய பச்சை மிளகாய், கறிவேப்பிலை தாளித்த பின்னர் பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயத்தைப் போட்டு வதக்கவும்.

அடுத்து உதிர்த்த கிழங்கு, உப்பு சேர்த்துக் கிளறவும்.

இறக்குவதற்கு முன் தேங்காய் துருவல் சேர்த்துக் கிளறினால் சுவையான, சத்தான பனங்கிழங்கு புட்டு தயார்!

# லாராவின் சாதனையை நெருங்கும் கிறிஸ் கெய்ல்




மேற்கிந்தியத் தீவுக்ள் அணியின் முன்னாள் ஜாம்பவான் பிரையன் லாராவின் சாதனையை அணியின் அதிரடி துடுப்பாட்டவீரரானகிறிஸ்கெய்ல் நெருங்கி வருகின்றார்.

மேற்கிந்தியத் தீவுகள் ஒரு நாள் அணி சார்பில், அதிக ஓட்டங்களை குவித்த வீரராக ஜாம்பவான் லாரா 10348 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

கிறிஸ் கெய்ல் 288 போட்டிகளில் விளையாடி 10074 ஓட்டங்களை குவித்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

ஆகையால், எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறப்போகிறேன் அறிவித்துள்ள கிறிஸ் கெய்ல், உலகக்கிண்ண தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 9 லீக் போட்டிகள் உள்ளநிலையில், இந்தச் சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது நடைபெற்று இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடருக்கு முன்னதாக 9672 ஓட்டங்களை பெற்றிருந்த கெய்ல், மூன்று போட்டிகளில் துடுப்பெடுத்தாடி 347 ஓட்டங்களைக் குவித்து விட்டார்.

லாராவின் சாதனையை தகர்த்தெறிய இன்னும் 10 போட்டிகளில் 330 ஓட்டங்கள் மட்டுமே கெய்லுக்கு தேவை. ஆகவே கிறிஸ் கெய்ல், லாராவின் சாதனையை முறியடித்து புதிய மைல்கல் உடன் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# உலக்கிண்ண சம்பியனை கணிப்பது மிகக் கடினம்

*- டி வில்லியர்ஸ்*



இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தை எந்த அணி வெல்லும் என்பதை கணிப்பது கடினம் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஏபி டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரில் விளையாடிவரும் ஏபி டி வில்லியர்ஸிடம், உலகக்கிண்ணத்தை எந்த அணி வெல்லும் என்பது குறித்து கேட்கப்பட்டது.

இது குறித்து பதிலளித்த அவர், 'யார் வெற்றி பெறுவார் எனக் கூறுவது கடினமானது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கடந்த காலங்களில் சிறப்பாக விளையாடியமையை பார்க்காமல் இருக்க முடியாது. பாகிஸ்தான்சம்பியன்ஸ்கிண்ணத் தொடரை வென்றுள்ளது.

ஆஸ்ரேலியாவையும் நீங்கள் புறந்தள்ளிவிட முடியாது. தென்னாபிரிக்கா அணியும் அவர்களால் வெற்றி பெற முடியும் என்று நம்புவார்கள். ஆகவே, இந்த ஐந்து அணிகளுக்கும் வாய்ப்பு உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிராகச் சொந்த மண்ணில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. இதனால் ஒன்று அல்லது இரண்டு அணிகளைக் குறிப்பிட்டு கூறுவது கடினமான விடயம்.

கடந்த காலங்களில் உள்ள எனது அனுபவத்தை வைத்து பார்க்கும்போது, இந்தியா அல்லது பாகிஸ்தான் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருப்பதாக நினைக்கிறேன்-என்றார்.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தை, இம்முறை தொடரை நடத்தும் இங்கிலாந்தே வெல்லும் என அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல, ஆசிய அணிகளான இந்தியா, பாகிஸ்தான் அணிகள் சவால் விடும் வகையில் விளையாடும் என்ற எதிர்பார்ப்பும் அதிக அளவில் உள்ளது. (ஐ)

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா இலங்கை?




தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர், ஜொஹன்னஸ்பேர்க்கில் இலங்கை நேரப்படி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

அந்தவகையில், தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி நம்பிக்கையுடன் இலங்கை காணப்படுகின்றபோதும் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை வெல்வதற்கு மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றது.

அதுவும் டெஸ்ட் தொடரை இழந்தமைக்கு பழிவாங்க தென்னாபிரிக்கா காத்திருக்கிறது. இன்னும் மூன்று மாதத்தில் உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், உலகக் கிண் ணம் குழாமில் இடம்பெறுவதற்கு றஸிவான் டர் டுஸன், டுவைன் பிறிட்டோறியஸ், வியான்முல்டர், றீஸா ஹென்ட்றிக்ஸ் ஆகியோர் சிறப் பான பெறுபேற்றை வழங்க எதிர்ப்பார்ப்பார்கள் என்ற நிலையில், இலங்கைக்கு இந்தத்தொடர்கடினமானதாகவே அமையவுள்ளது.

அந்தவுகையில், மீள்வருகை தந்துள்ள



சிரேஷ்ட வீரர் உபுல் தரங்கவோடு, குஷல் பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டாலே தொடரை வெல்வது குறித்து இலங்கை சிந்திக்க முடியும்.

இதுதவிர, அணித் தலைவர் லசித் மலிங்கவை விட ஏனைய பந்துவீச்சாளர்கள் அனுபவம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றபோதும், டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்துவீசிய விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித ஆகியோரின் மீது நம்பிக்கை காணப்படுகிறது.

தனது பந்துவீச்சுப்பாணியை திருத்தி தடையிலிருந்து மீண்டு வந்துள்ள சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சய மீதும் எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

மறுபக்கமாக, இத்தொடருக்கான குழாமில் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரரான ஹஷிம் அம்லா இல்லாதபோதும், அணித்தலைவர் பா' டு பிளெஸி, டேவிட் மில்லர், குயின்டன் டி கொக் என பலமானதாகவே துடுப்பாட்டவரிசை காணப்படுகின்றது.

பந்துவீச்சுப் பக்கமும் சகலதுறை வீரர்கள் பட்டாளத்துக்கு மேலாக, காயத்திலிருந்து மீண்டு வந்த லுங்கி என்கிடி, டேல் ஸ்டெய்ன், இம்ரான் தாஹீர் என பலமானதாகவே காணப்படுகிறது. வேகமாக பந்துவீசும் புதுமுக வீரர் அன்றிச் நொர்ட்ஜே எவ்வாறு செயற்படுவார் என எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது. (ஐ)

# றியல் மட்ரிட்டை வீழ்த்தி இறுதியில் பார்சிலோனா

ஸ்பானியக் உதைபந்தாட்டக் கழங்களுக்கிடையிலான கோப்பா டெல் ரே தொடரின் இறுதிப் போட்டிக்கு, நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா தகுதி பெற்றுள்ளது.

விலகல் முறையிலான இந்தத் தொடரில், தமது மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியை 1-1 என சமநிலையில் முடித்திருந்த பார்சிலோனா, றியல் மட்ரிட்டின் மைதானத்தில், இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்று, 4-1 என மொத்த கோல் கணக்கிலேயே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியின் முதற்பாதியில், றியல் மட்ரிட்டின் இளம் முன்கள வீரர் வின்சியஸ் ஜுனியர், கோல் கம்பத்தை நோக்கி ஐந்து உதைகளை உதைத்த போதும் அவற்றை பார்சிலோனாவின் கோல் காப்பாளர் மார்க் அன்ட்ரே டியர் ஸ்டீகன் தடுத்ததோடு அவரின் இரண்டு உதைகள் கோல் கம்பத்துக்கு மேலால் சென்றன. அவரின் பெனால்டி வாய்ப் பொன்றும் நிராகரிக்கப்பட்டது.




இதன் பின்னர், இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில் சக முன்கள வீரர் உஸ்மான் டெம்பிலியால் முன்னெடுக்கப்பட்ட வேகமான நகர்வொன்றின் மூலம் போட்டியின் 50ஆவது நிமிடத்தில் கோலைப் பெற்ற பார்சிலோனாவின் இன்னொரு முன்களவீரரான லூயிஸ் சுவாரஸ் தனது அணிக்கு முன்னிலை வழங்கினார்.

பின்னர், 59ஆவது நிமிடத்தில்; டெம்பிலி வழங்கிய பந்தொன்றை சுவாரஸ் பெறுவதைத் தடுக்க முயன்ற றியல் மட்ரிட்டின் பின்கள வீரர் ரபேல் வரான், தனது கோல் கம்பத்துக்குள் பந்தைச் செலுத்த, தமது முன்னிலையை பார்சிலோனா இரட்டிப்பாக்கியதுடன், அடுத்த நான்காவது நிமிடத்தில் வென்றெடுத்த பெனால்டியொன்றை சுவாரஸ் கோலாக்கினார்.

இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்று, 4-1 என்ற மொத்த கோல் கணக்கில் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடன்பாடில்லை. அவ்வாறான ஒரு வரைவு கொண்டு வந்திருப்பதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடை பவில்லை.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் கால அவகாசம் வழங்கப்படுவது தமிழ் மக்களையும் உலக நாடுகளையும் ஏமாற்றும் ஒரு

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருமித்து எடுப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி ஆராய்ந்தன.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன பங்கேற்கவில்லை.

ரெலோ ஏற்பாடு செய்திருந்த இந்தச் சந்திப்பு யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய கட்சிகளுக்கு ரெலோ அழைப்பு விடுத்திருந்தது.

ஆயினும் இக்கூட்டத்தில் ரெலோ, புளொட், ஈ.பீ.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஏனைய 3 கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.

ஆயினும் கூட்டம் முடிவடைந்த பின்னர் அங்கு தமிழரசுக் கட்சி பின் தலைவர் மாவை சேனாதிராசா வருகை தந்தார். இதனை அடுத்து ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம், தவிசாளர் மற்றும் இளைஞரணிச் செயலாளர் ஆகியோருக்கும் மாவை சேனாதிராசாவுக்கும் இடையே தனியாக ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது கால அவகாசம் வழங்குவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-07)

## செவ்வாயன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜெட்டில் வழமைபோல் இம்முறையும் பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5 ஆம் திகதி நிதி அமைச்சரின் பட்ஜெட் உரை மாத்திரமே இடம் பெறும்.

6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும். 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்துக்கு 19 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:

இதன்படி 13 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4ஆம் திகதிவரை குழுநிலை விவாதம் நடைபெற்று, 5 ஆம் திகதி பட்ஜெட் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அதேவேளை, பட்ஜெட் முன்வைக்கப்படும் தினத்தில் பார்வையாளர் கலரி மூடப்பட்டிருக்கும். முன்கூட்டியே அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஆராய்வதற்காக அன்று மாலை அரசியல் கட்சிகளின் கூட்டங்களும் நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெறவுள்ளன. (ஐ)

செயற்பாடாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாதென்ற நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் ஒருமித்து எடுப்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மாவை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்கள் தரப்பிலுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றாகக் கூடி மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் வரவிருக்கும் பிரேரணை குறித்துக் கலந்துரையாடப்பட்டிருக்கிறது. இதில் கலந்துகொண்ட கட்சிகளுடன் பங்கேற்காமல் உள்ள இன்னும் பல கட்சிகளையும் இதற்குள் இணைத்துக் கொள்வது மிக முக்கியமென்று நாங்கள் கருதுகின்றோம்.

அப்படி ஆராய்ந்த விடயங்களில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் பிரிட்டனால் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரேரணை இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளது என்ற செய்தி ஊடகங்கள் மூலம் எங்களுக்கு கிடைத்திருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக ஜனாதிபதி கூறிவருகின்றார். இப்போது மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறிய பின்னர் ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளின் உதவியுடன் பிரிட்டன் இலங்கை தொடர்பில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர முயற்சி எடுத்துள்ளது..

ஆனால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நாங்கள் திருப்தியடையவில்லை. அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு இதயபூர்வமாகச் செயற்பட்டது என்று நாங்கள் குறிப்பிடமாட்டோம்.

சென்றதடவை மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு கால அவகாசம் கொடுக்கப்படவேண்டுமென்பது எங்கள் முடிவு அல்ல. அது மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தீர்மானம். அதில் பல சர்ச்சைகளும் எழுந்திருந்தன.

மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஏற்கனவே கொடுத்த கால அவகாசம் முடிவடையும் தறுவாயில் புதியதொரு பிரேரணையாகக் கொண்டுவர பிரிட்டன் முயற்சி எடுத்துள்ளது. இலங்கைக்கு மீண்டும் இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கப்படவேண்டுமென்று அந்தப் பிரேரணை வந்திருப்பதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைவில்லை. எங்களைப் பொறுத்தவரை மீண்டும் தமிழ் மக்களையும் உலக நாடுகளையும் ஏமாற்றமடையச் செய்யும் பிரேரணையாகவே அதனை நாம் பார்க்கிறோம்.

கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் இந்த நிலைமைகளை ஆராய்ந்து மனித உரிமைகள் பேரவையில் வரவிருக்கும் பிரேரணை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒட்டுமொத்தமாக முடிவு எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அதையொட்டி இன்று நடந்த கூட்டத்திலே ஒரு வரைவு முன்வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வரைவை இன்று கலந்துகொண்ட கட்சிகள், வெளியில் உள்ள கட்சிகள் ஆராய்ந்து ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும் – என்றார். (ஐ-07)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு, மயிலிட்டி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் காணிகளும், பலாலி கிழக்கில் பிரதான வீதி ஒன்றும் விடுவிக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவசிறியிடம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இராணுவத்தினர் காணி விடுவிப்புக்கான பத்திரத்தை ஒப்படைக்கவுள்ளனர்.

காணிகள் விடுவிக்கப்படவுள்ள நிலையில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பை வந்தடைந்த நிலையில், இந்தப் போராட்டம் கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ரெலிகொம் சந்திவரை சென்று பின்னர் ரயில் நிலையத்தை வந்தடைந்தனர். இதன்போது, கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது.

காணி உரிமைக்கான மக்கள் இயக்கம் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் அனுசரணை வழங்க கடந்த 26ஆம் திகதி கேப்பாபிலவில் இருந்து வாகனப் பேரணியை ஆரம்பித்திருந்தனர். அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாகப் போராட்டத்தை நடத்தி கையெழுத்து போராட்டத்தையும் ஆரம்பித்தனர்.

பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் வழியாக பேரணி நேற்றுக் கொழும்பைச் சென்றடைந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்குப் போராட்டம் இடம்பெற்றது.

'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'எமது வீடு எமக்கு வேண்டும்', 'எமது காடு எமக்கு வேண்டும்', 'காணிகளை விட்டு வெளியேறு', 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும்' என பல்வேறு கோசங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இதைத்தொடர்ந்து கையெழுத்து திரட்டும் நடவடிக்கையும் இடம்பெற் றது. இன,மத பேதமின்றி பலரும் கையொப்பமிட்டனர். (ஐ)

## ஜனாதிபதிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது என இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா நேற்று மாலை அறிவித்தார்.

ஜனாதிபதிக்குரிய நிதி ஒதுக்கீடுகளுக்கு (அவரின் கீழுள்ள அமைச்சுகள் உட்பட) எதிராக வாக்களித்து – அவற்றை தோற்கடிப்பதற்கு ஐ.தே.கவின் பின்னிலை எம்.பிக்கள் தயாராகவுள்ளனர் என்று முஜிபூர் ரஹ்மான் எம்.பி. நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டிருந்தார்.

கூட்டுஎதிரணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் எம். பிக்கள் சிலரும், தமது முயற்சிக்கு ஒத் துழைப்பு வழங்குவார்கள் என வும் அவர் கூறினார்.

அத்துடன், ஐ.தே.கவின் மேலும் சில பின்னிலை எம்.பிக்கள் இந்நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

இது தொடர்பில் ஐ.தே.கவின் நிலைப்பாட்டை வினவியபோதே கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணைந்து ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் மக்கள் வாக்களித்தனர். எனவே, ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிப்பதற்கான தேவைப்பாடு ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கிடையாது. அதை செய்யவும் மாட்டோம். என்றும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

## பகிரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் சிலர் அநாகரீகமாக நடந்துகொண்டமைக்கு பகிரங்க மன்னிப்பு கோருகின்றார் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அந்தப் போராட்டத்துக்கு எங்களுக்கும் அழைப்பு தரப்பட்டது. மக்களுக்காகப் பங்கு கொண்டோம். போராட்டத்தில் ஒருவனாகத்தான் நான் கலந்துகொண்டிருந்தேன். முன்வரிசையில் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்காத காரணத்தால், மக்களுடன் மக்களாக சென்றேன். அதனால் அங்கு நடந்த குழப்பங்களை உடனடியாக அவதானிக்க முடியவில்லை.

அந்தப் போராட்டத்தில் சில பிரதேச சபை உறுப்பினர்களும், மேலும் சில உறுப்பினர்களும் நடந்து கொண்ட விதம் தொடர்பில் செய்திகள், காணொலிகள் ஊடாக நாம் பார்த்தோம். நாம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் அந்த நபர்கள் அன்று நடந்து கொண்ட முறை தவறு என்பதைக் கண்டறிந்தோம். அதன்படி அந்த உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அன்று அவர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பிலும், பத்திரிகையாளர்களுடன் நடந்து கொண்ட விதம் தொடர்பிலும் நான் பகிரங்கமாக மன்னிப்பு கோருகின்றேன்.

எங்களது கட்சிசார்ந்த இரண்டு பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர் ஒருவர் என மூவர் முரணாக நடந்தமை எங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மூவரும் கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளார்கள். அவர்கள் மீது ஒழுக்காற்றுவிசாரணை நடக்கிறது. கட்சிக்குரிய நாகரிகத்துடனும், ஜனநாயகத் தன்மையுடனும் அது நடக்கிறது. கட்சியின் செயலாளருக்கு எழுத்துமூலம் அதை அறிவித்துள்ளோம்.

பத்திரிகையாளர்களுக்கும், அந்த மூவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பெரியளவில் பாதிப்பைக் கொண்டு வந்தன. எங்களது கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களின் நாகரிகத்துக்குப்புறம்பான நடவடிக்கைக்குப் பத்திரிகையாளர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கிறேன்.

அது தவறு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இனிவரும் நாட்களில் இப்படியான சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளும் கடமையும், பொறுப்பும் மக்களை வழிநடத்தும் கட்சியென்ற வகையிலும், மக்களுக்கு பொறுப்புச் சொல்லும் தலைமைப் பாத்திரத்தை இந்த மாவட்டத்தில் வகிக்கின்ற காரணத்தாலும் உண்மைகளை ஏற்று, ஆராய்வு செய்து, பத்திரிகையாளர்களிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன்

அந்தப் போராட்டத்தில் காணாமற்போனோர் விடயத்தில் பொறுப்பு கூறவேண்டியவர்களும் கலந்து கொண்டு கோபத்தைச் சீண்டக் கூடிய வகையில் நடந்து கொண்டனர். அதனாலும் இவ்வாறு இளைஞர்கள் சிலர் சீண்டப்பட்டு அவர்களின் உணர்வுகள் தூண்டப்பட்டன – என்றார். (ஐ)

## சம்பந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்ட விடயங்கள் தொடர்பில் உண்மைத் தன்மை தனக்குத் தெரியாது என்றும், ஆனால் தான் ஒருபோதும் அவரைச் சுடுவதற்காகத் திரியவில்லை எனவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு[illegible]லளித்த சிறிதரன் –

சம்பந்த[illegible] விடுதலைப் புலிகள் கொ[illegible]ய்ய திட்டமிட்டிருந்தார்கள் என[illegible]ரிவிக்கப்பட்ட விடயங்கள் தொ[illegible] உண்மைத் தன்மை குறித்து தெரியாது. நான் ஒருபோதும் அவரைச் சுடுவதற்காகத் திரியவில்லை.

மஹிந்தராஜபக்ஷ விடுதலைப் புலிகளின் சுடப்படும் பட்டியலில் தான் இருந்தார் எனத் தெரிவித்தபோது, அந்தப் பட்டியலில் தானும் இருந்தார் எனச் சம்பந்தனே தெரிவித்திருந்தார். ஆனாலும் அவரைத் தலைமையாகக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு விடுதலைப் புலிகள் தேர்தல் வெற்றியும் கண்டனர் – என்றார்.

விடுதலைப் புலிகளும் குற்றம் செய்தனர் என சுமந்திரன் கூறிவரும் விடயம் தொடர்பில் உண்மைத்தன்மை உள்ளதா என அவரிடம் வினவியபோது –

யுத்தம் இடம்பெறுகையில் எவரும் உண்மைதன்மையாகச் செயற்பட மாட்டார்கள். போராட்ட இயக்கங்களிடம் உண்மைத் தன்மை இருக்க வேண்டும் என எதிர்பார்க்கவும் முடியாது. ஐ.நா. அமர்வில் விடுதலைப் புலிகளும் 4 குற்றங்களைச் செய்துள்ளனர் என அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் படையினரே அதிகம் குற்றம் செய்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் உள்ள ஒரு நாட்டில் அவர்களால் இழைக்கப்பட்ட குற்றங்கள் பிரதானமாகக் காணப்படும். அதே வேளை விடுதலைப்புலிகள் இழைத்தார்கள் எனக் கூறப்படும் குற்றங்களை விசாரிப்பதற்கு அந்த அமைப்பை வழிநடத்தியவர்கள் இல்லை. அவ்வாறு இருந்தால் அவர்களிடம் விசாரணை செய்யட்டும்.

ஒரு கட்டத்தில் 4 இலட்சத்துக்கு மேல் மக்கள் அங்கு உள்ளனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி உள்ளிட்ட பலரும் தெரிவித்திருந்தனர். பஸில் ராஜபக்ஷ, மிகக் குறைவான ஆட்களே அங்கு இருந்தனர் எனத் தெரிவித்தபோது ஆனந்தசங்கரி, ராயப்பு ஜோசப் உள்ளிட்ட பலரும் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையானதென பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதையும் மீறி படையினர் பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டனர். கொத்துக்குண்டுகள், விமானக் குண்டும் தாக்குதல்களாலும் தாக்குதல்களை மூர்க்கமாக மேற்கொண்டனர். இவ்வாறான நிலையில் யுத்தக் குற்றம் தொடர்பில் அதிகம் பொறுப்பு கூறவேண்டியவர்கள் படையினரே – என்றார்.

சுமந்திரன் கூறிய கூற்று சரியானதா என மீண்டும் அவரிடம் வினவியபோது–

சுமந்திரன் யுத்தம் இடம்பெற்ற போது இங்கு இருக்கவில்லை. இங்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் அவருக்குத் தெரியாது. வெறுமனே அவர் அறிக்கைகளை வைத்தே கருத்துக்களைத் தெரிவிக்[illegible]என்றார்.

# வெடுக்குநாறி மலைக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள்!

## நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்





வவுனியா, மார்ச் 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ஜி,ரி.லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் இ,தணிகாசலம் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளடக்கிய குழு நேற்று நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராயும்பொருட்டே இந்தக் குழுவினர் அங்கு பயணம் மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்ற அவர்கள், ஆலயத்தின் பூசகர் மற்றும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினர். பூசை வழிபாடுகளிலும் பங்கேற்றனர்.

அதன் பின்னர் புதிதாக மக்கள் மீள்குடியேறிய பகுதியான காஞ்சிராமோட்டைக்கும் அவர்கள் சென்று அங்குள்ள மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்தனர். (ஐ-100)

# 6 ஆம் திகதி அநுரவை சந்திக்கிறார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 03

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையிலான சந்திப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்கக் கோரும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு, அரசியல் கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஜே.வி.பி. தீவிரமாக இறங்கியுள்ளது.



இதன் ஓர் அங்கமாகவே மஹிந்தவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.

விஜித்த ஹேரத், சுனில் ஹத்துனெத்தி, நளிந்த ஜயதிஸ்ஸ, லால் காந்தா ஆகியோரும் ஜே.வி.பியின் சார்பில் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கப்பட வேண்டும் என்பதே கூட்டு எதிரணியின் நிலைப்பாடாக உள்ளது என்று விமல் வீரவன்ஸ அறிவித்துள்ளார்.

எனவே, 20 ஐ ஆதரிக்கும் நிலைப்பாடு எடுக்கப்படுமானால் தீர்க்கமான அரசியல் முடிவெடுக்கப்படும் என்றும், ஜே.வி.பினரைச் சந்திக்கவேண்டிய தேவை இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார் விமல். (ஐ)

# 25 இலங்கை மீனவர்கள் மாலைதீவில் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 03

25 இலங்கைமீனவர்கள்மாலைதீவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த மீனவர்கள் மாலைதீவு கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு அந்த நாட்டு அதிகாரிகளால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இந்த மீனவர்கள் திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 4 படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி மாலைதீவு கடல் எல்லையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமையால் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என அந்நாட்டு அதிகாரிகள் கூறினர். (ஐ)




# முக்கோண வெடிகளைக் கோர்த்து வெடிக்க வைத்தவரின் கை சிதைவு

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணம் குருநகர் ஐந்து மாடி குடியிருப்புப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற திருவிழாவின் போது மூலை வெடி களைப் பற்றவைத்த போது ஏற்பட்ட வெடி விபத்தில் இளம் குடும்பத் தலைவரின் வலது கை மணிக்கட்டுடன் முற்றாக சிதைவடைந்தது.

அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த வெடிவிபத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது.

குருநகரைச் சேர்ந்த கஜன் (வயது-27) என்ற இளம் குடும்பத் தலைவரே படுகாயமடைந்தார். அவர் அண்மையில்தான் திருமணமானவர் என்று தெரிவிக்கப்பட்டது.

மூலை வெடிகள் பலவற்றை ஒன்றாக இணைத்துப் பற்றவைத்த போது, அதன் பிணைப்பு குடும்பத் தலைவரின் கைக்குள் சிக்கியுள்ளது.

அதனால் அவரது வலது கையின் மணிக்கட்டுப் பகுதிக்குள் கீழ் முற்றாகச் சிதவடைந்துள்ளது என்று வைத்திய சாலையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-07)

# பொலிஸ் அலுவலரும் மகளும் வீதி விபத்தில் பரிதாபமாக சாவு!

## குருநாகலில் நேற்றுச் சம்பவம்

குருநாகலில் இடம்பெற்ற விபத் தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவரது 2 வயது மகளும் உயிரிழந்துள்ளமையோடு 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குருநாகல், சாரகம வாவிக்கு அருகில் ஓட்டோ ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கார் ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 30 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரும் அவரது 02 வயது மகளும் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்த அவரது மனைவி, மனைவியின் தாய் மற்றும் தந்தை ஆகியோர் படுகாயமடைந்து குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் தந்தை ஓட்டோவை ஓட்டிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.